பக்கங்கள் எட்டு:
விலை ரூபா 5-00
Registered as a News Paper in SriLanka

...நூலகம்
யாழ்ப்பாணம்
நாவாந்துறைப் படிப்பகம்

# வலம்புரி
# VALAMPURI

அசல் 22 கரட் தங்க
நகைகளுக்கு யாழ் நகரில்
சிறந்த ஸ்தாபனம்
அர்ச்சனா
ஜுவலர்ஸ்
118, கஸ்தூரியார் வீதி.
176/1, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.
(கி-1980)

சங்கு 02 வள்ளுவர் ஆண்டு 2032 சித்திரை 30 ஞாயிற்றுக்கிழமை 13 05-2001 தொலைபேசி: 3378 ஒலி: 145

## சமாதானப்பேச்சு நெருங்கும்போது அரசு மீது நம்பிக்கையில்லாபிரேரணை

# ஐ.தே.கட்சியின் முடிவு

# முட்டாள் தனமானது

## ஆனந்தசங்கரி தெரிவிப்பு

(நமது நிருபர்)

அரசுக்கும், தமிழீழவிடுதலைப் புலிகளுக்கும் இடையில் சமாதானப்பேச்சுக்கள் நெருங்கி வரும் இவ்வேளையில் ஐக்கிய தேசியக் கட்சி முட்டாள்தனமாக நம்பிக்கையில்லாத் தீர்மானத்தைக் கொண்டுவருவது சந்தேகத்தை எழுப்பியுள்ளது. இதனால் ஐக்கிய தேசியக் கட்சி கொண்டுவரும் நம்பிக்கை இல்லாத்தீர்மானத்தை நாம் ஆதரிக்கப் போவதில்லை, ஆனால் அரசு சமாதானம்பற்றிய தனதுநிலைப்



பாட்டை மாற்றினால் எமது தீர்மானமும் மாறலாம், என தமிழர் விடுதலைக்கூட்டணியின் சிரேஷ்ட உபதலைவரும், யாழ் மாவட்ட எம்பியுமான வீ ஆனந்தசங்கரி தெரிவித்துள்ளார்-

பொதுஜன ஐக்கிய முன் இருந்து வெளியாகும்ஆங்கில நம்பிக்கைஏற்பட்டிருக்கிறது.

## இந்திய மீனவர் 9பேரும் நீதவான் முன்னிலையில ஆஜர்

(யாழ்ப்பாணம்)

நெடுந்தீவுக் கடற்பரப்பில் வைத்து நேற்று முன் தினம் கடற்படையினரால் கைது செய்யப்பட்ட 9இந்திய மீனவர்களும் நேற்று யாழ். நீதவான் இ. த. விக்கினராஜா முன்னிலையில் அவரின்வாசஸ்தலத்தில் ஊர்காவற்றுறைப் பொலிஸாரால்ஆஜர்படுத்தப் பட்டனர்.

இவர்களை எதிர்வரும் 25ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதவான் உத்தரவிட்டார்

கைது செய்யப்பட்ட 9இந்திய மீனவர்களின் பெயர்கள வருமாறு. கே. செல்லையா, எஸ் ஸ்ரனிஸ், கே பொன்னுச்சாமி, வி ஜென்வில்சன், பு. தயாளன் ரிமைக்கல், டி. நித்தியசீலன், எ. டெனிஸ்ரன், ஏ கார்மேகம்.

இவர்கள் அனைவரும் தூத்துக்குடியைச் சேர்ந்தவர்களாவர் (ந-10)

## ரவிகருணாரத்னாவுக்கு எதிராக சுவரொட்டி

(கொழும்பு)

ஐ.தே.க.பா, உறுப்பினர்களான ரவி கருணாரத்ன, ராஜித சேனாரத்ன ஆகியோரை கட்சியிலிருந்து நீக்க வேண்டும் என்று கோரும் வர்ணச்சுவரொட்டிகள் கொழும்பு நகரின் பல இடங்களில் ஒட்டப்பட்டிருக்கின்றன.

இதற்குமுன்னும்தாமிருந்த கட்சிகளை உடைத்தவர்கள் இவர்கள் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளதுடன். இவர்களிடமிருந்து ஐ.தே. கட்சியை அதன் உறுப்பினர்களே காப்

(8ஆம் பக்கம் பார்க்க)

## கலவரத்தில் ஈடுபடுபவரை கண்ட இடத்தில் சுட பொலிசாருக்கு உத்தரவு

(கொழும்பு)

இனக்கலவரத்தில் ஈடுபடுபவர்களை கண்டஇடத்தில்சுட ஊவா மாகாண பொலிஸ் நிலையத்திற்கு அனுமதிவழங்கப்பட்டுள்ளது.

பதுளைநகர பஸ்சாரதிகள் மோட்டார், மற்றும்ஆட்டோ

பொலிஸ்மாஅதிபர்குணசேனதேனுமது இத் தகவலை தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், அண்மைக் காலமாக நாட்டில் இடம் பெறும் சம்பவங்களின் விளைவாக யாராவது கலவரம் செய்ய முயன்

பாட்டை மாற்றினால் எமது தீர்மானமும் மாறலாம், என தமிழர் விடுதலைக்கூட்டணியின் சிரேஷ்ட உபதலைவரும், யாழ் மாவட்ட எம்பியுமான வீ ஆனந்தசங்கரி தெரிவித்துள்ளார்.

பொதுஜன ஐக்கிய முன்னணி அரசைக் கவிழ்க்கும் நோக்குடன் ஐக்கிய தேசியக் கட்சி கொண்டுவரும் நம்பிக்கை இல்லாப் பிரேரணை தொடர்பாக தமிழர்விடுதலைக்கூட்டணியின்சிரேஷ்ட உப தலைவரும், யாழ். மாவட்ட எம்பியுமான வி. ஆனந்தசங்கரி கொழும்பில் இருந்து வெளியாகும்ஆங்கில தினசரி ஒன்றுக்கு அளித்த பேட்டியில் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்திருப்பதாவது:

ஆண்டுக்கணக்காக சமாதானத்திற்காக காத்திருந்த எமக்கு இறுதியில் ஒரு சிறு நம்பிக்கைஏற்பட்டிருக்கிறது. இத்தருணத்தில் சமாதானப் பேச்சுவார்த்தைகளை நாம் குழப்பவிரும்பவில்லை. இவ்விடயம் தொடர்பில் விடுதலைப்புலிகள் எடுத்துள்ள நிலைப்பாட்டில் சிறிதளவு தடுமாற்றமான நிலைஏற்பட்டிருந்தாலும்அந்நிலை விரை (8ஆம் பக்கம் பார்க்க)

# அரசும் புலிகளும் யுத்தத்தை நிறுத்தி பேச்சுக்கு முன்வரவேண்டும்

## கூட்டணியின் நிறைவேற்றுக்குழு வேண்டுகோள்

அரசும், தமிழீழ விடுதலைப் புலிகளும் யுத்தநிறுத்தம் ஒன்றை மேற்கொண்டு சமாதனப் பேச்சுவார்த்தையில் ஈடுபட முன்வரவேண்டும் என்று அரசையும் விடுதலைப் புலிகளையும் தமிழர் விடுதலைக் கூட்டணியின் நிறைவேற்றுக்குழு கேட்டுக்கொண்டுள்ளது.

கொழும்பிலுள்ள தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைமைச் செயலகத்தில் நேற்றுக்காலை கூட்டணியின் நிறைவேற்றுக் குழுக் கூட்டம் நடைபெற்றது.

இக்கூட்டத்திற்கு தமிழர் விடுதலைக் கூட்டணியின் செயலாளர் நாயகம் இரா. சம்பந்தன் தலைமை தாங்கினார்.

பொதுஜன ஐக்கிய முன்னணி அரசைக் கவிழ்க்கும் [8ஆம் பக்கம் பார்க்க]

# அரசும்-புலிகளும் சமாதானத்தைவிலக்கினால் நோர்வே தனது முயற்சியை துண்டித்துவிடும்

## இணையத்தளத்திற்கு எரிக்சோல் பேட்டி

(கொழும்பு)

இலங்கை அரசாங்கமும், விடுதலைப்புலிகளும் சமாதான முயற்சியிலிருந்து விலகுவதாக நோர்வேகருதுமாயின் அது தனது சமாதான முயற்சியை விலக்கிக் கொள்ளும்.

இவ்வாறு இணையத் தளமொன்றின் கேள்விகளுக்குப் பதிலளித்த நோர்வேயின் விசேட தூதுவர் எரிக்சோல் ஹெய்ம் தெரிவித்துள்ளார்.

இணையத்தளத்தின் மூலம் எரிக்சோலிடம் கேட்கப்பட்ட கேள்விகளும் அவர் அளித்த பதில்களும் வருமாறு,

கேள்வி (1):-

நோர்வேயின் சமாதான முயற்சி தோல்வியடைவதற்கு அரசு காரணமாக இருந்தால் விடுதலைப் புலிகள் ஓர் விடுதலை அமைப்பு எனசர்வதேச சமூகத்திற்கு எடுத்துக்கூறுவீர்களா?

கேள்வி (2):-

விடுதலைப்புலிகள் உங்களைப் பயன்படுத்தி விட்டதாக நீங்கள் கருதினால் விடுதலைப் புலிகள் பயங்கரவாதிகள் என மேற்குலகிற்கு அறிவிப்பீர்களா?

பதில்:-

அரசாங்கம் நோர்வேயின் சமாதான முயற்சியிலிருந்து பின்வாங்குகிறது விடுதலைப் புலிகள் நோர்வேயைப் பயன்படுத்துகிறது எனநாம்உணர்ந்தால் எமது சமாதான முயற்சியைத்துண்டித்து விடுவோம்.

இதுதவிர நீதிபதியின் தீர்ப்புக்கூறும் கடமையைச் செய்யமாட்டோம்.

கேள்வி:-

சமாதான முயற்சி பற்றிய விபரங்களை இந்தியாவுக்குத் [8ஆம் பக்கம் பார்க்க]

வர்களை கண்டஇடத்தில்சுட ஊவா மாகாண பொலிஸ் நிலையத்திற்கு அனுமதிவழங்கப்பட்டுள்ளது.

பதுளைநகர பஸ்சாரதிகள் மோட்டார், மற்றும்ஆட்டோ தனியார் வாகனசாரதிகளை அழைத்து வெள்ளிக் கிழமை பதுளையில் கூட்டம் ஒன்றை நடாத்திய ஊவாயபிராந்தி வித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், அண்மைக் காலமாக நாட்டில் இடம் பெறும் சம்பவங்களில் விளைவாக யாராவது கலவரம் செய்ய முயன்றால் பதவி, அந்தஸ்து பாரா பல் கண்ட இடத்தில சுட்டுக் கொல்லப் படுவர் எனவும் தெரிவித்தார். [உ-7]

2001/2002ஆம் கல்வி ஆண்டு

# 12 ஆயிரம் மாணவர்கள் 12 பல்கலைக்கு அனுமதி

(கொழும்பு)

2001/2002ஆம்கல்வியாண்டுக்காக 12 ஆயிரம் மாணவர்கள் நாட்டிலுள்ள 12 தேசிய பல்கலைக்கழகங்களுக்கும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

கடந்த வருடம் க.பொ.த (உயர்தரப்)பரீட்சைக்கு பழையபாடத்திட்டத்தின் கீழும் புதியபாடத்திட்டத்தின் கீழும் தோற்றிய மாணவர்களில் இருந்தே இந்த 12 ஆயிரம் மாணவர்களும் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர்.

இம்முறை பல்கலைக்கழக அனுமதிக்காக விண்ணப்பிப்பதற்கு சுமார் 90 ஆயிரம் மாணவர்கள் க.பொ.த (உயர்தர) பரீட்சை மூலம் தகுதி பெற்றிருந்தனர்

தெரிவு செய்யப்பட்டுள்ள சுமார் 12 ஆயிரம் மாணவர்களுக்கு நாட்டிலுள்ள 12 தேசிய பல்கலைக்கழகங்களிலும், மருத்துவம், பொறியியல், கலை, வர்த்தகம், வாணிபம், கட்டடம் உட்பட பல்வேறு பீடங்களுக்கு அனுமதிக்கப்படவுள்ளனர்.

இப் பல்கலைக்கழகங்களுக்கு மாணவர்கள் அனுமதி பெறுவதற்கான வெட்டுப் புள்ளியை பல்கலைக்கழக மானிய ஆணைக்குழு நேற்று முன்தினம் வெளியிட்டுள்ளது. (வ

## சீனப் பிரதமர் இல-வருவார்!

ஜனாதிபதி குமாரதுங்காவின் அழைப்பை ஏற்று சீனப் பிரதமர்சூறொங்கிஇம்மாதம் 17ந் திகதி இலங்கைக்கு விஜயம் செய்யவுள்ளாரென இலங்கை வெளி யுறவு அமைச்சர் தெரிவித்துள்ளார்.

தெற்காசிய சுற்றுப் பயணத்தின் ஓர் அம்சமாக இங்குவரும் சீனப்பிரதமர் சீனவெளியுறவு அமைச்சர் வர்த்தக அமைச்சர் உட்பட பல உயர் மட்டத்தூதுக்குழுவையும் அழைத்துவருவர்.

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

## சிறு விளம்பரம்


### தவறிவிட்டது

கா. தமிழினி என்பவரது பாடசாலை அடையாள அட்டை [0903003619] (பாடசாலை அத்தியார் இந்துக்கல்லூரி) நல்லூர் அரசடி வீதியில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் க. மகாலிங்கம் 31, அரசடி வீதி, நல்லூர். அல்லது இலக்கம் 15, 'வலம்புரி' வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம். என்னும் முகவரியில் ஒப்படைக்கவும்.

(கி/1983)

### தவறிவிட்டது

ஐயாத்துரை நிதிபாலன் என்பவருடைய விசேட அ. அட்டை (இல 0907023037) தேசிய அடையாள அட்டை இல.(790774990 V) என்பன மருதனார்மடத்திற்கும் இருபாலைக்கும் இடையில் 12. 05 2001 அன்று தவறிவிட்டது கண்டெடுத்தவர்கள் மில்லேன் மல்லாகம் என்ற முகவரியில் ஒப்படைக்கவும் சன்மானம் வழங்கப்படும்.

(கி-1987)


### கண்பரிசோதனை முகாம்

வல்வெட்டித்துறைமாவட்ட வைத்தியசாலை அபிவிருத்திச் சபை மாதாந்தம் நடாத்தி வரும் கண்பரிசோதனை முகாம் வரிசையில் எட்டாவது நிகழ்வு இம்மாதம் 20 ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை மு.ப10.00 மணிக்குமேற்படி வைத்தியசாலை கிளினிக்மண்டபத்தில் இடம் பெறவுள்ளது.

இடம்பெயர்ந்து வடமராட்சியில் வாழும் 40 வயதிற்கு மேற்பட்ட 300பேருக்கு மாத்திரமே அன்றைய தினம் கண் பரிசோதனை இடம்பெறும்.

எஸ். எம். பெர்னான்டோ நிறுவனத்தின் நிபுணர் குழு கண்பரிசோதனைகளை மேற்கொள்ளவுள்ளனர். (உ)

# கணிப்பீட்டுமுறை மாணவர்மத்தியில் புத்தூக்கத்தை ஏற்படுத்தவில்லை

(யாழ்ப்பாணம்)

பாடசாலை மட்டக் கணிப்பீட்டு முறை மாணவர்களுக்குப் புத்தூக்கத்தினை வழங்கவில்லை என்பது யாழ். குடாநாட்டு ஆசிரியர்கள் மத்தியில் மேற்கொள்ளப்பட்ட துஆய்வுகளின்றும் தெரியவந்ள்ளது.

பாடசாலை மட்டக்கணிப்பீடு அறிமுகப் படுத்தப்பட்டு 3 வருடத்திற்கும் மேற்பட்ட நிலையில் அதன் விளைவினை மதிப்பீடு செய்யும் கணிப்பீடு ஒன்றை மேற்கொள்ளும் முகமாக யாழ். மாவட்டத்தில் பரவலாக தேர்ந்தெடுக்கப்பட்ட 100 ஆசிரியர்களிடையே இது குறித்த கணிப்பீடு மேற்கொள்ளப்பட்டது.

அக்கணிப்பீட்டின் பிரகாரம்,

பாடசாலைக் கணிப்பீட்டு முறையை மாணவர்களின் பெற்றோர் விரும்பவில்லை என்பதை 72 வீதமான ஆசிரியர்கள் வெளிப்படுத்தியுள்ளனர்,

இக் கணிப்பீட்டு முறை அறிமுகத்தினால் கல்வியில் அபிவிருத்தி ஏற்பட்டதா என்ற வினாவிற்கு 50 வீதமான ஆசிரியர்களே ஆம் எனப் பதிலளித்துள்ளனர்.

அத்துடன் மேற்படி முறை அறிமுகத்தால் மாணவர்கள் தனியார் கல்வி நிறுவனங்களுக்குச் செல்வதைக் குறைவில்லை என்பதும் தெரியவந்துள்ளது. [உ]

## கிழக்கு மாகாணம் செல்லும் உதைபந்தாட்ட அணி வீரர்கள் விபரம்

(சுண்டுக்குளி)

கல்வி கலாசார விளையாட்டுத்துறை அமைச்சினால் நடாத்தப்படும் மாவட்ட அணிகளுக்கு இடையிலான உதைபந்தாட்டப் போட்டியில் கலந்து கொள்ள யாழ். மாவட்ட உதைபந்தாட்ட அணி விளையாட்டு உத்தியோகஸ்தர் எஸ்.திருமாறன் தலைமையிலான குழு கிழக்கு மாகாணத்திற்கு எதிர்வரும் செவ்வாய்க்கிழமை செல்லவுள்ளது.

அரசாங்க அதிபர் கே.சண்முகநாதன் மேலதிக அரசாங்க அதிபர் ரி.வைத்திலிங்கம், யாழ்.மாவட்ட விளையாட்டுத்துறை அதிகாரி திருமதி ஏ.எவ்.ஜே றூபசிங்கம் ஆகியோர் எடுத்துக் கொண்ட முயற்சியின் பயனாகவே 16 வருடகால இடைவெளியின் பின் யாழ்.மாவட்ட உதைபந்தாட்ட அணி வெளி மாவட்டப்போட்டிகளில் கலந்து கொள்ள செல்கின்றமை குறிப்பிடத்தக்கது.

அணியில் இடம்பெறுவோர் விபரம் வருமாறு: தலைவர் எஸ்.திருமாறன், உபதலைவர் கே.முகுந்தன், முகாமையாளர் கப்ரின் டி ஏ.எம். குணசிங்கம்,

வீரர்கள்: பர்ணாந்து செல்ரன், அகஸ்ரின்ஜியோஜனஸ், இம்மானுவல் ஆனல்ட், இம்மானுவல்ஒலிநெற், அருளானந்தம்நெல்சன், அருளானந்தம்அருள்பிரகாஷ், திருத்துவதாஸ் அஜந்தன், அகஸ்ரின் றொட்னி மார்வுல், அமிர்தநாதர் சுரேந்திரன், சதானந்தன் வருனாணந்தன், சிவநேசன் சபாஆனந், நிக்கோலஸ் ஜெயந்திரன், இலட்சுமிகாந்தன் அனுராகாந்தன் திருஞானசம்பந்தர் கோகுலன், வைரமுத்து தர்மகுலநாதன், கிறிஸ்தோப்பர் சுரேஸ், வில்லியம் பிறேமனாத், மரியதாஸ் சில்வெஸ்ரர், தேவசகாயம் சந்திரகுமார், யேசுதாஸ் விவிலியன் பிக்லஸ், (உ-110)

## டீசல் கையிருப்பில் இல்லை

(ஊர்காவற்றுறை)

ஊர்காவற்றுறையில் உள்ள இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபன முகவர்நிலையமான ஊர்காவற்றுறைப் பலநோக்குக் கூட்டுறவுச் சங்க எரிபொருள் விற்பனை நிலையத்தில் டீசலுக்குத் தட்டுப்பாடு நிலவுகிறது.

கடந்த ஒரு வாரத்திற்கு மேலாக ஊர்காவற்றுறைப் பலநோக்குக் கூட்டுறவுச்சங்க எரிபொருள் விற்பனை நிலையத்தில் டீசலின் கையிருப்புத் தீர்ந்து விட்டதாகத் தெரிவிக்கின்றது. (உ- 75)

## பொதுச் சுகாதாரப் பரிசோதகர் நியமனம்

(ஊர்காவற்றுறை)

வேலணைப்பகுதிக்கு பொதுச் சுகாதாரப்பரிசோதகராக பி. யோகராஜா இம்மாதம் தொடக்கம்நியமிக்கப் பட்டுள்ளார்;

வேலணைப்பகுதியில்முன்பு பொதுச் சுகாதாரப் பரிசோதகராகப் பணியாற்றிய எம். சிறீதரன் யாழ்ப்பாணத்திலுள்ள சுகாதாரசேவைகள் மாகாணப் பிரதிப் பணிப்பாளர் அலுவலகத்தில் இயங்கும் யாழ். மாவட்ட விசர்நோய்த் தடுப்புப் பிரிவு பொதுச்சுகாதாரப் பரிசோதகராக நியமிக்கப்பட்டுள்ளாரென்பது குறிப்பிடத்தக்கது; (உ- 75)

## இராசி பலன்

13 / 5 / 2001
(சித்திரை 30 ஞாயிறு)
சஷ்டி ந. இ. 12. 26 வரை
உத்தராடம்மு.இ10 06வரை
ராகுகாலம் 4,24 -5 54
நல்லநேரம் 8 . 54 - 10 , 24
அமிர்தம்

**மேடம்**
தொழில் மேன்மை, முயற்சி கைகூடும், சுப நிகழ்ச்சி, நல்ல செய்தி;

**இடபம்**
பிரயாணம், கட்டுப்பாடு உடல் உபாதை, காரிய தாமதம்;

**மிதுனம்**
அமைதிக்குறைவு, காரிய தடங்கல், எதிர்பாராத பிரச்சினை, பிரயாண பயம்;

**கடகம்**
இலட்சுமிகரம், திடீர் பயணம், காரிய சித்தி, விருந்து பசாரம்;

**சிங்கம்**
வியாதி குணமடைதல் தன வரவு, சந்தோசநிலை, புதிய முயற்சி.

**கன்னி**
தாழ்வு நிலை, குடும்பக் கவலை, பெரியோர்வெறுப்பு காரிய தாமதம்.

**துலாம்**
தன் நம்பிக்கைக்குறைவு பயந்த சுபாவம், முயற்சி தாமதம், பகைவர்விலகுவர்;

**விருச்சிகம்**
பிரயாணம், சகோதரர் உதவி. சந்தோசமான சம்பவம், அன்னியர் சந்திப்பு.

**தனுசு**
தனவிரயம், கௌரவக் குறைவு, ரோகம், காரிய தாமதம்;

**மகரம்**
ஜன வசியம், நண்பர்கள் உதவி, ஆழ்ந்த சிந்தை, சயன சுகம்;

**கும்பம்**
பெரியோர்மதிப்பு, சுபசெலவு திடீர்நன்மை, காரியதாமதம்.

**மீனம்**
தன லாபம், காரியநன்மை கௌரவம், குடும்ப சுகம்;

(பழையநேரப்படிகணிப்பிடப் பட்டது)

வளவன்

# மக்களின் துன்ப துயரங்களில் அரசியல் நடத்தும் எண்ணமில்லை

## அமைச்சர் டக்ளஸ் விளக்கம்

(யாழ்ப்பாணம்)

தமிழ் மக்கள் தமது நல்வாழ்வுக்காகத் தமது வியர்வையைச் சிந்த வேண்டும். நாம் உங்களின் ரத்தத்தைக் கேட்க மாட்டோம். மக்களின் துன்பங்கள், துயரங்கள் இழப்புகளுக்கு மத்தியில் அரசியல் நடத்துவது எமது எண்ணமல்ல. மக்களது அடிப்படைப் பிரச்சினைகளை நீக்கி மக்களை நல்ல சமுதாயமாக வாழவைப்பதே எமது நிலைப்பாடாகும்:

இவ்வாறு அமைச்சர் டக்ளஸ்தேவானந்தா நேற்று முன்தினம் யாழ்ப்பாணத்தில் உள்ள அவரது பணிமனையில், அவரைச் சந்தித்த தென்மராட்சிப் பிரதேச வர்த்தகர்கள் மற்றும் பொதுமக்கள் மத்தியில் உரையாற்றும் போது குறிப்பிட்டார்;

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்,

யுத்தம் காரணமாக தென்மராட்சியில் இருந்து இடம் பெயர்ந்த குடும்பங்கள் மீண்டும் அங்கு சென்று தமது சொந்தக் காணியில், சொந்த வீட்டில் நிம்மதியாக வாழ வேண்டும் என்பதே எனது [illegible]

பொதுஜன ஐக்கிய முன்னணி அரசாங்கத்தில் நான் அமைச்சர் பதவியை எடுத்தது எனது தலையில் கிரீடத்தை அணிவதற்காக அல்ல. எமது மக்களின் நல்வாழ்வு, சுபீட்சம் கருதியே இவ் அமைச்சுப் பதவியைப் பொறுப்பெடுத்தேன்.

அதன்மூலம் எமது மக்களின் துயர் துடைப்புப் பணியில் ஈடுபட்டு வருகின்றேன். எமது பணிகள். சேவைகள் மேலும் பெருகவேண்டும். அதற்கு மக்களாகிய உங்களின் விசுவாசமான ஒத்துழைப்பும் ஆதரவும் எமக்கு வேண்டும். என்று கேட்டுக் கொண்டார். (உ-77)

## புன்னாலைக்கட்டுவனில் குழந்தைகள் பகல் பராமரிப்பு நிலையம்

(யாழ்ப்பாணம்)

புன்னாலைக்கட்டுவன் விவசாயப் பிரதேசங்களில்வாழும் குழந்தைகளைப் பராமரிக்க பகல் பராமரிப்பு நிலையம் அமைக்கப்படவுள்ளது.

இது குறித்த உறுதிமொழி, அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவினால் அவரைச் சந்தித்த புன்னாலைக்கட்டுவன் கிராமிய உழைப்பாளர் சங்கப்பிரதிநிதிகளிடம் வழங்கப்பட்டுள்ளது

அண்மையில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவைச் சந்தித்த மேற்படி சங்கப்பிரதிநிதிகள் மகஜர் ஒன்றினையும் கையளித்துள்ளனர்.

அதில், தாயின்பராமரிப்பில் இருக்க வேண்டிய சிறு குழந்தைகளைத் தனியே வீட்டில் விட்டு தாய் கூலிவேலைக்குச் செல்வதாலும்,

தாய் தந்தையரின் தகுந்த பராமரிப்பும் அரவணைப்பும் இன்மையாலும் இக்குழந்தைகள் பாதுகாப்பற்ற சூழலில் வளர்ந்து வருகின்றனர்.

இச்சிறுவர்கள் மற்றும் குழந்தைகளின் கல்வி, சுகாதாரம், போஷாக்கு ஆகிய விடயங்களில் ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் எடுக்கவேண்டும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. (உ)

## பொலிஸ் நிலையத்துடன் தொடர்பு கொள்ளுமாறு அவசர அழைப்பு

(யாழ்ப்பாணம்)

காணாமற்போனோர் சம்பந்தமான விசாரணையினை நடாத்தி வரும் விசேட புலனாய்வுப் பிரிவினர் பின்வரும் கிராம சேவகர்களை யாழ். சுன்னாகம் பொலிஸ் நிலையங்களுக்கு சமுகம் கொடுக்குமாறு அறிவித்துள்ளனர்.

**சுன்னாகம் பொலிஸ் நிலையம்**

ஜே/168, ஜே/239, ஜே/292, ஜே/186, ஜே/265, ஜே/342, ஜே/272, ஜே/148,

**யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையம்**

ஜே/ 295- நாவற்குழி தெற்கு கைதடி, ஜே/ 78 அத்தியடி- ரவீந்திரதாஸ், ஜே/73யாழ்ப்பாணம்மேற்கு, ஜே/ 83 நாவாந்துறை, ஜே/ 149 பண்டத்தரிப்பு, ஜே/ 28 பீச் றோட் யாழ்ப்பாணம்;

(உ-10)

## சுகாதாரக் கல்வி நிகழ்ச்சித்திட்டம்

[ஊர்காவற்றுறை)

ஊர்காவற்றுறை சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுக்குட்பட்ட பகுதிகளில் பரவலாக சுகாதாரகல்விநிகழ்ச்சி இடம் பெற்றுவருகின்து.

இதில் மாணவர்கள் பொது மக்கள் எனபலதரப்பட்டவர்களுக்கும்சுகாதாரம் தொடர்பான விடயங்கள், அறிவுறுத்தல்கள், ஆலோசனைகள் என்பன வீடியோப்படக் காட்சி மூலம் விளக்கப்பட்டு வருகின்றது.

அந்தவகையில் எதிர்வரும் செவ்வாய்க்கிழமைமு. ப. 10 மணிக்கு காரைநகர் அரசினர் சுற்றயல்கூறு வைத்தியசாலையின் வெளிநோயாளர் பகுதியில் வைத்து வீடியோப்படக் காட்சியுடனான விளக்கமும், அதேவேளை நண்பகல் 12 மணிக்கு காரைநகர் மருதபுரம் கிராம அபிவிருத்திச் சங்கமண்டபத்தில் பொது மக்களுக்கு வீடியோப்படக் காட்சியுடனான சுகாதார கல்வி வழங்கப்படவுள்ளது; [உ-75]

## கலைஞர்கள் சந்திப்பு

(யாழ்ப்பாணம்)

கொழும்பு, திருகோணமலை, ஹப்புத்தளை மாவட்ட திருமறைக் கலாமன்ற கலைஞர்களுக்கும் யாழ் திருமறை கலாமன்றகலைஞர்களுக்குமான சந்திப்பு ஒன்று நாளை மன்றத்தில் இடம் பெறவுள்ளதாக மன்றப் பிரதிநிதி ஒருவர் தெரிவித்தார்; (உ-104)


**சயன்ஸ் அக்கடமி**
- நல்லூர்
முன்னோடி பரீட்சை - 4
(தரம் - 05)
P. துவாரகா-175-SJB V
T. தனுஜா 175 -SJB V
P. கிருஷியா 154-CB;
K. சரவணம்154AAMMV
N. சிந்துஜா-152 HLPC
S. தர்ஷிகா152AAMMV
(கி-1988)

## சோதிட பலன்

# மனிதனின் குண இயல்புகளை அப்பட்டமாக வெளிக்கொணரும் எண்சோதிடக்கலை

(சென்ற வாரத்தொடர்ச்சி)

உங்களுக்கு பிறந்த எண்ணோ, விதிஎண்ணோ அதிர்ஷ்டவாய்ப்புடைய எண்ணாக இருக்க வேண்டியது அவசியமாகும். அவரவர் பிறந்த தேதிதான் பிறந்த எண்ணாகும். 5 ஆம் திகதி பிறந்தவர் 5 எண்ணுக்குடையவர் ஆவார் 16 ஆம் திகதியில் பிறந்தவர் 1+6=7 எண்ணுக்குடையவர் ஆவார் இவ்வெண்ணம் கணக்கிட்டு அவரவர் பிறந்த எண்ணைக் கண்டுபிடித்துக் கொள்ளவும்.

விதிஎண் என்பதில் பிறந்த திகதி, மாதம், வருடம் ஆகிய மூன்றையும் கூட்டி வரும் எண்ணாகும். பிறந்த திகதி 14-2-1973 என்றால், 1+4+2+1+9+7+3 =27. 2+7=9. இந்த 9 என் விதி எண் ஆகும். இவ்வெண்ணம் அவரவர் பிறந்த திகதி, மாதம், வருடம் என்பவற்றைக் கூட்டிக் கண்டுபிடித்துக் கொள்ளவேண்டும் என்பதை நினைவில் வைத்துக் கொள்ளுங்கள்.

பொதுவாக அதிர்ஷ்ட வாய்ப்புள்ள எண்கள் என்பவை 1,3,5,6,9-ம் அவற்றின் விரிவு எண்களும் ஆகும். 1-க்கு விரிவு எண் 10,19,28 ஆகும், இப்படியே மற்றைய எண்களுக்குமாகும். அதிர்ஷ்ட வாய்ப்பில்லாத எண்கள் 2,4,7,8 என்பவையாகும். உங்களுக்குப் பிறவி எண், விதி எண், பெயர் எண் ஆகிய மூன்றுமே, அதிர்ஷ்ட வாய்ப்புடைய எண்களாகவோ அதிர்ஷ்ட வாய்ப்பில்லாத எண்களாகவோ அமைந்து விடமுடியாது. பிறவி எண், விதிஎண் என்பவை உங்களால் மாற்றப்படமுடியாதவை, ஆனால் பெயர் எண் என்பது உங்கள் விருப்பப்படி மாற்றிக்கொள்ளக்கூடிய ஒன்றாகும்.

உங்கள் பெயரைத் தலையெழுத்துடன் எழுதி, ஒவ்வோர் எழுத்துக்கும் உள்ள எண் மதிப்பீட்டைப் போட்டுக் கூட்டிவரும் எண்ணே பெயர் எண்ணாகும். பெயரில் உள்ள எழுத்தை மாற்றி நல்ல எண்ணாக அமைத்துவிட்டால் அதிர்ஷ்ட எண்ணாக மாற்றிக்கொண்டால், பிறவி எண், விதிஎண், பெயர் எண் ஆகிய மூன்று எண்களில் ஒன்றாவது உங்களுக்கு நிச்சயம் அதிர்ஷ்ட வாய்ப்பைக் கொண்டுவரக் கூடும். இதிலும் நீங்கள் கவனிக்க வேண்டிய விஷயம் ஒன்று உண்டு. அதிர்ஷ்ட வாய்ப்புள்ள எண் என்பதற்காக ஓர் எண்ணைத் தேர்ந்தெடுத்துக்கொண்டு உங்கள் பிறந்த எண்ணுக்கும், விதி எண்ணுக்கும் பொருந்தாத வகையில் பெயர் அமைத்துக் கொண்டும். உங்களுக்கு ஒத்துழைப்புக் கொடுக்க கூடியவர்கள் யாராக இருக்க முடியும் என்பதையும் முன்னதாகவே நீங்கள் தெரிந்து கொண்டால் அது உங்களுக்கு மிகவும் உதவியாக இருக்கும். அதற்குச் சுலபமான வழி ஒன்று உண்டு. நீங்கள் யாருடைய ஒத்துழைப்பை விரும்பி நாடுகிறீர்களோ அவர்களுடைய பிறந்த திகதி என்ன என்று தெரிந்துகொள்ள வேண்டும், அவர் தன் பெயரை எப்படி எழுதுகிறார் என்று தெரிந்தால் அவரது பெயர் எண்ணையும் தெரிந்து கொள்வது நல்லது. 1 எண் உடையவர்களுக்கு 8, 4, 1 எண் உடையவர்கள்

## பேராசிரியர் என். சாமி

ரர்களாயின் அதனால் பயன் உண்டாவது என்பது அரிதாகும்.

உங்கள் பிறவி எண்ணுக்கு அல்லது விதி எண்ணுக்கு நட்புடைய ஓர் எண்ணைப் பெயர் எண்ணாக அமைத்துக் கொள்ளவேண்டும், அந்தப் பெயர் எண் அதிர்ஷ்ட எண்ணாக அமையவேண்டும், பிறவி எண் விதி எண் இரண்டிற்கும் நட்புடைய எண்ணாக அமைந்தால்தான் முழுமையான பயன் உண்டாகமுடியும். ஒன்றுக்கு நட்பும் மற்றொன்றுக்குப் பகையுமானால் முழுப்பயன் கிட்டாது என்பதை முக்கியமாகக் கவனத்தில் கொள்ள வேண்டும், சிலருக்கு அவர்களின் பிறவி எண்ணும் விதி எண்ணும் ஒன்றுக்கொன்று பகையாக இருந்துவிடக்கூடும் அல்லவா? இது இயற்கையாகவே நேர்ந்து விடுகிற ஒரு பலவீனம்.

பெயர் எண்ணானது இந்த இரண்டுக்கும் நட்புடையதாக இருக்க வேண்டிய அவசியம் உண்டு. அப்படி அமைகின்ற பெயர் எண் அதிர்ஷ்ட வாய்ப்பு உடைய எண்களில் ஒன்றாகவும் இருக்க வேண்டும்.

உதவியாக இருப்பார்கள். இவற்றில் 8க்கு முதன்மை கொடுங்கள். அவரது உதவி உங்களுக்கு மிகுதியாகக் கிடைக்கும். அடுத்தது 4 எண் ஓரளவு பயன் தரத்தக்க உதவிகளைச் செய்வார்கள் 1எண் காரர்கள் மூலம் மிகக் குறைந்த அளவிலான உதவியை எதிர்பார்க்கலாம்.

2 எண் காரர்கள் 7 எண் காரர்களை விடவே விடாதீர்கள். தொழில்நிலைப்பதற்கான அடிப்படை உதவிகளைச் செய்யக் கூடியவர்கள் இவர்கள் தாம். அடுத்தாற்போல 1, 3, 4, 8 எண் காரர்களை நாடலாம். தக்க சமயத்தில் உதவுவார்கள்.

3 எண் காரர்களுக்கு 2எண் காரர்கள் மிகவும் உதவியாய் இருப்பார்கள். அவர்கள் உதவியை நீங்கள் அவசியம் பெறலாம். அடுத்தாற போல உங்களுக்கு உதவியாக இருக்கக் கூடியவர் 9 எண் காரர்தான், இவர்களிடமிருந்தும் நல்ல விதமான உதவிகள் கிடைக்கலாம்.

4 எண் காரர்கள் 1, 6, எண் காரர்களின் உதவியைப் பெறலாம் மனமுவந்து உதவுவார்கள், அடுத்ததாக பயனுள்ள உதவிகளைச் செய்யக் கூடியவர்கள் 4, 2 எண்காரர்களே.

5 எண் காரர்கள் மிகவும் பாக்கியசாலிகள். அனைத்து எண் காரர்களும் உதவி செய்ய முன் வருவார்கள். அனைத்திற்கும் காரணம் உங்கள் முக விலாசம் தான்.

6 எண் காரங்களுக்கு 3, 6, 9 எண் காரர்களிடமிருந்து நல்ல உதவிகள் கிடைத்து வரும், அவர்களுள் 3 எண் காரர்களிடமிருந்துகுறிப்பிடத்தக்க உதவி கிடைக்கும்.

7 எண் காரர்களுக்கு 1, 2, 4, 7 எண் காரர்கள் உதவி செய்ய முன் வருவார்கள், உங்களையும் கைதூக்கி விடுவார்கள். 1, 2 எண் காரர்களிடமிருந்து தான் முக்கியமான உதவிகள் கிடைக்கும்.

8 எண் காரர்கள் 1, 4, எண் காரர்களிடமிருந்து நல்ல பயனுள்ள உதவிகளைப் பெறுவார்கள், தொழில் நிலைத்து நிற்க 1 எண் காரரை விடவே விடாதீர்கள், அடுத்தாற் போல 8 எண் காரர்களிடமிருந்து ஓரளவு உதவிகிடைக்கலாம்.

9 எண் காரர்கள் 3, 5, 6, 9 எண் காரர்களின் உதவியை அவசியம் பெறுவார்கள், காலம் அறிந்து நிச்சயமாக பலன் தரக்கூடிய சிறந்த உதவிகளைச் செய்வார்கள், அடுத்தாற் போல் 8 எண் காரர்களும் ஓரளவு உதவுவர்.

இவர்கள் எல்லோரும் உங்களுக்கு உதவி செய்யக் கடமைப் பட்டவர்கள் அல்லர். இருந்தாலும் நீங்கள் அவர்களிடம் நடந்து கொள்வதற்கேற்ப அவர்களும் உங்களுக்கு உதவ முன் வருவார்கள். எப்பொழுதும் நீங்கள் கொடுத்தால் தான் அது பன்மடங்காகத் திரும்பக்கிடைக்கும் இது உலக இயல்புதானே.

[தொடரும்]

## யாழ்.வளாகச் சுற்றாடலில்

# மதுபான விற்பனை நிலையங்கள் அதிகரிப்பு பல்கலை சமூகம் அரச அதிபருக்கு கடிதம்

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக்கழகச் சுற்றாடலில், 16 மதுபான விற்பனை நிலையங்கள் உட்பட ஏராளமான சட்ட விரோத கசிப்பு விற்பனை நிலையங்கள் ஆங்காங்கே செயற்பட்டு வருகின்றன.

யாழ். பல்கலைக்கழகச் சமூகத்தினரால் யா/அரச அதிபருக்கு அனுப்பி வைக்கப்பட்ட சட்டவிரோத மதுபான விற்பனை நிலையங்களைத் தடை செய்வது குறித்தான கடிதத்தில் மேற்கண்ட தகவல் காணப்படுகிறது.

அக்கடிதத்தில் மேலும்,

ஆலயங்கள், மருத்துவமனைகள், பொதுசன நூல் நிலையங்கள் என்பவற்றுக்கு அருகில் அனுமதி பெறாத மதுபான விற்பனை நிலையங்கள் இயங்கி வருவது

மற்றும்,

இந் நடைமுறைக்குச் சட்டரீதியான அனுமதி வழங்கப்பட்டிருப்பது குறித்தும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது தவிர,

இவ்வருடம் முதல்காலாண்டில் சட்டவிரோதமான, மது உற்பத்தியாளர்கள் யா/ பொலிஸ் பிரிவில் 80 பேரும், பருத்தித்துறை பொலிஸ் பிரிவில 70 பேரும், மல்லாகம் பொலிஸ் பிரிவில் 65 பேருமாக மொத்தம் 215 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

(உ-6. -77)

அரியாலை கொழும்புத்துறை

# இடம் பெயர்ந்தோர் வீடுகளில் திருட்டு அதிகரிப்பு

[யாழ்ப்பாணம்]

கடந்தகால யுத்த அனர்த்தங்களால் இடம்பெயர்ந்து இதுவரை மீளக் குடியமர அனுமதிக்கப்படாத கொழும்புத்துறை மற்றும் அரியாலைப் பகுதியைச் சேர்ந்த மக்களின் வீடுகளில் எஞ்சியுள்ள பொருட்களும் பெறுமதிமிக்க மரங்களும் திருட்டுக் கோஷ்டிகளால் தொடர்ந்து களவாடப்படுவதாக அப்பகுதி மக்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

மேற்படி பகுதிகளில் வீடு பார்க்கப் போவதாக இராணுவத்தினரின் அனுமதியை பெற்றுச் செல்லும் திருட்டுக் கோஷ்டிகளே, இவ் அநாகரிக செயலை செய்வதுடன் வீடுகளுக்குள் புகுந்து பெறுமதிமிக்க மரங்களை விறகுக்காக வெட்டிச் செல்கின்றனர்.

[உ-15]

# வறுமை ஒழிப்பில் இலங்கை முன்னணியில்

[கொழும்பு]

வறுமை ஒழிப்புத் திட்டங்களில் அமெரிக்கா, ஜப்பான் ஆகிய நாடுகளை விட இலங்கை முன்னணியில் திகழ்கின்றது என்று அமைச்சர் எஸ் பி திஸாநாயக்க கூறியுள்ளார்.

அமெரிக்கா, ஜப்பான் போன்ற அபிவிருத்தியடைந்த நாடுகளில் 17 சதவீதமான மக்கள் வறுமைக் கோட்டின் கீழ் வாழ்கின்றனர்.

அவர்களை வறுமையிலிருந்து மீட்டெடுக்க எவ்வித மாற்றுத்திட்டங்களும் இல்லை ஆனால்,

இலங்கையில் வறுமையின் பிடிக்குள் அகப்பட்டிருக்கும்மக்களை வறுமையிலிருந்துமீட்டெடுப்பதற்காகவே சமுர்த்தி அபிவிருத்தி திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது என்றும் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

(உ-3)

## ஆலய உற்சவம்

இணுவில் ஸ்ரீ பரராஜசேகரப் பிள்ளையார் கோயில் வருடாந்த மஹோற்சவம் இம் மாதம் 16 ஆம திகதி புதன் கிழமை நண்பகல் 12 மணிக்கு கொடியோற்றத்துடன் ஆரம்மாக உள்ளது.

(உ-49)

## இருவரைக் காணவில்லை

(யாழ்ப்பாணம்)

காரைநகர்மற்றும் நீர்வேலி ஆகிய இடங்களைச்சேர்ந்த இரு இளைஞர்களைக் காணவில்லையென்று மனித உரிமை ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணக் கல்லூரி விடுதியில் தங்கி கல்வி கற்று வந்த காரைநகர் வாரிவளவைச் சேர்ந்த வரதராசா திருவரங்கன் (வயது 15) என்ற மாணவனை கடந்த மாதம் 25ஆந்திகதிமுதல்காணவில்லையென்றும் மற்றும் நீர்வேலி வடக்கைச்சேர்ந்த அரியகுட்டி சுரேஸ் (வயது 19) என்ற இளைஞனை கடந்த 7 ஆந் திகதிமுதல்காணவில்லையென்றும் மனித உரிமை ஆணைக்குழுவிடம் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

[10]

## சமூகமளிக்க கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் மத்தியகல்லூரியில் இம்மாதம் 19 ஆம் திகதி இடம்பெறவுள்ள மக்கள் குறைகள் செயலமர்வுக்கு சமூகம் கொடுக்கவிருப்பமுடையவர் காவற்றுறை மக்களை இம்மாதம் 17 ஆம திகதி ஊர்காவற்றுறை பிரதேசசபை அலுவலகத்திற்கு சமூகமளிக்குமாறு தலைவர் என. மதனராஜா தெரிவித்துள்ளார்.

(உ-6)

அருட் தந்தைக்கு

## வரவேற்பு

[யாழ்ப்பாணம்]

யாழ். ஆயரினால் அண்மையில் பணிக்குருவாக திருநிலைப்படுத்தப்பட்ட அருட்தந்தை எஸ். எயின்சிலி மறாஷானுக்கு அவரின் சொந்த இடமான ஆனைக்கோட்டை அடைக்கலநாயகி ஆலய பங்கு மக்களால் கடந்த வியாழக்கிழமை சிறப்பாக வரவேற்பளிக்கப்பட்டது.

மானிப்பாய் வீதியிலிருந்து அருட்தந்தையின் வீடு வரையான பகுதிகள் அலங்கரிக்கப்பட்டு வாத்திய இசையுடன் குருவானவர் அடைக்கலநாயகிஆலயத்திற்கு பங்கு மக்களால அழைத்துவரப்பட்டார்.

ஆலயத்தில் அன்று காலை பத்து மணியளவில குருவானவர் தமது முதல நன்றித் திருப்பலியை நிகழ்த்தினார்.

(உ-15)

## நினைவஞ்சலி கூட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ். கோப்பாய் ஆசிரியர் கலாசாலை முன்னாள் உப அதிபரும், எழுத்தாளருமான அமரர் க. குமாரசாமியின மறைவையொட்டி கலாசாலை சமூகத்தினதும், பழைய மாணவர்களினதும் ஏற்பாட்டில 23 ஆம் திகதி புதன்கிழமை பி ப 2. 30 மணிக்கு மேற்படி கலாசாலையில அதிபர் முபரஞ்சோதி தலைமையில 45 ஆம் நாள் நினைவஞ்சலிக் கூட்டம் இடம்பெறவுள்ளது.

(உ-10)

## கோழிகளுக்கு தூக்கநோய்

(மல்லாகம்)

அண்மைக் காலத்தில் நிலவும் மாறுபட்ட காலநிலை காரணமாக யாழ்ப்பாணத்தின பல பகுதிகளில வளர்க்கப்படும் கோழிகள் தூக்க நோயினால் இறக்கின்றன.

மேற்படி தூக்கநோயினால் சுன்னாகம், உருமபிராய்ப்பகுதிகளில், வீட்டு வளர்ப்பிலுள்ள கோழிகள் இறந்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

(உ-122)

## கைகொடுத்தல்

# நிதி உதவித் திட்டம் தெரிவானோர் விபரம்

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக் கழகமுகாமைத்துவ கற்கைகள், வணிக பீட மாணவர் ஒன்றியத்தால் "உயிர்" விசை நாடக ஆற்றுகை மூலம் சேகரிக்கப்பட்ட நிதி, 1996/1997 ஆம் ஆண்டு காலப் பகுதிகளில் காணாமற் போனவர்களின் குடும்பங்களைச் சேர்ந்த கல்வி பயிலும் 74 சிறார்களுக்கு 2 ஆயிரம் ரூபா வீதமும், க.பொ.த (சா.த) மாணவர்களுக்கு ஆயிரம் ரூபா வீதமும் வழங்கப்படவுள்ளது.

கொடுப்பனவைப் பெற தகுதி பெற்றவர்களின் பெயர் விபரம் வருமாறு.

**சிறார்கள் விபரம்:**

சந்திரசேகரம் டொறிங்கன் யாழ்ப்பாணம்- சந்திரசேகரம் டினோசன் யாழ்ப்பாணம்- விவேகானந்தன் துசாரியா உடுப்பிட்டி- விவேகானந்தன் பிரசாந்தன் உடுப்பிட்டி- ஜெயபாலன் கோபிகா ஆவரங்கால் மேற்கு- ஜெயபாலன் வினோதிகா ஆவரங்கால் மேற்கு- அன்னலிங்கம் ததீஸ்குமரன் சண்டிலிப்பாய் வடக்கு- அன்னலிங்கம் பிரசாந்தினி சண்டிலிப்பாய் வடக்கு- ஜோன்சன் பானுஜன் யாழ்ப்பாணம்- ரவிச்சந்திரன தீபன்ராஜ் கோண்டாவில் மேற்கு- கண்ணதாசன் சஜீத் பருத்தித்துறை- கண்ணதாசன் உசாந்தன் பருத்தித்துறை- சண்முகம் எழில்வாணி ஆவரங்கால் கிழக்கு- ஜெயராசா சோபிகா சங்கரத்தை துணவி.

இராசகுமார் தக்டிலா ஏழாலை மேற்கு- ரமேஸ் தாமிலா வேலணைத்துறை- அன்ரனி தெய்வேந்திரன் டவித் கரணவாய்- அன்ரனி தெய்வேந்திரன் பிறிபா கரணவாய்-ஸ்ரீஸ்கந்தராசா ரிஷபன் கரவெட்டி வடக்கு- கணேசலிங்கம் கோகிலன் வேலணைத்துறை- அழகரத்தினம் தனுஸ்கா நிற்சாமம், சங்கானை- அழகரத்தினம் மகரன் நிற்சாமம், சங்கானை- சிதம்பரப்பிள்ளை கமலதாசன் வேலணை கிழக்கு-சிவகுரு ஜெயந்தினி சண்டிலிப்பாய் வடக்கு- சிவகுரு ஜெனிஸ்வரன் சண்டிலிப்பாய் வடக்கு- இராசிங்கம் தர்சலா குளப்பிட்டிச் சந்தியுயடிகா முகாம்- இராசிங்கம் தர்மினி குளப்பிட்டிச்சந்தியுமடிகா முகாம்-இராசசிங்கம் சிந்துஜா குளப்பிட்டிச் சந்திகியுயடிகா முகாம்.

சுப்பிரமணியம் ஆன்றிரோபுனி ஊர்காவற்றுறை- கணேமூர்த்தி சுரேஸ்குமார் சுழிஜி சரமபத்தி கணபதிப்பிள்ளை ஸ்ரீகுமார் அல்வாய் தெற்கு- பூவேந்திரராஜா சுகன்யா திருநெல்வேலி வடக்கு- பூவேந்திரராஜா திலக்சினி திருநெல்வேலி வடக்கு- பூவேந்திரராஜா வைஷ்ணவி திருநெல்வேலி வடக்கு- சிறிதரன் ஜெனுஷ் கரவெட்டி- சிறிதரன ஜெயந்தினி கரவெட்டி-சிவபுண்ணியமூர்த்தி ஜிந்துசன் கரவெட்டி-சிவபுண்ணிய மூர்த்தி சுசிந்தன் கரவெட்டி- சற்குணராசா மதீசன் சுழிபுரம்- சற்குணராசா ராகுலன் சுழிபுரம்- ஜெயராஜா ரெக்சன் உரும்பிராய்- சிவராம உசேந்தினி வவுனியா.

சிவராம் விநோதினி வவுனியா- சற்குணநாதன் அற்புதகுமார் சங்கரத்தை துணவி- சற்குணநாதன் மேனகாசங்கரத்தை துணவி- சற்குணநாதன் சர்மிளா சங்கரத்தை துணவி- கந்தையா ஸ்ரீரூபன் கோண்டாவில் கிழக்கு-சுதாகரன் யஸ்மினா மானிப்பாய்- ஜயாத்துரை சத்தியசீலன் வட்டுக்கோட்டை- கறுப்பன் சதீஸ் யாழ்ப்பாணம்- நாகமுத்து சௌசிகா கரவெட்டி- வில்பிறட் மேரிமில்கிறேட் மானிப்பாய்- அன்ரனி மேரி றெனோலா ஈச்சமோட்டை- அன்ரனி நிரோஜன் ஈச்சமோட்டை- அருளானந்தம் திருக்குமாரி யாழ்ப்பாணம்- தர்மலிங்கம் நிசாந்தன் கந்தரோடை சுன்னாகம்.

லோறன்ஸ் லக்ஸிகோ நிற்றா யாழ்ப்பாணம்-தேவதாசன் எபிநேசர் கரணவாய் தெற்கு-நாகராசா பகிதாஸ் இணுவில் தெற்கு-பரமநாதன் கிருஷ்ணவேணி சித்தங்கேணி -சந்திரகுமார் மௌிகா புத்தூர் மேற்கு.

சந்திரகுமார் யனுசன் புத்தூர் மேற்கு-கணபதி நிலாகினி கோப்பாய் வடக்கு- துரைசிங்கம் சிந்துஜா நவாலி தெற்கு-துரைசிங்கம் வனஜா நவாலி தெற்கு-ஜெயராஜா கரோல்டமினடன் குருநகர் யாழ்ப்பாணம்.

றொனி செலூமியேஸ் யாழ்ப்பாணம்-விக்கினராஜா அனுசியா துன்னாலைமேற்கு -விக்கினராஜா தனுசியா துன்னாலை மேற்கு-அம்பிகாவதி கௌதம் வல்வெட்டித்துறை-சதீஸ்குமார் கௌதம் அல்வாய் மேற்கு-சதீஸ்குமார் சியாம்சன் அல்வாய் மேற்கு -கோடீஸ்வரன் சுசிகரன் மானிப்பாய் - கோடீஸ்வரன் விஜிகரன் மானிப்பாய்.

**க. பொ. த (சா/த) மாணவர் விபரம்**

சண்முகம் நிரஞ்சினி ஆவரங்கால் கிழக்கு-கணேசலிங்கம் பத்மா வேலணைத்துறை -கணேசலிங்கம் சுகந்தா-ஆவரங்கால் சிதம்பரப்பிள்ளை குபேதினி வேலணை கிழக்கு -புவேந்திரராஜா சிந்துஜா திருநெல்வேலி வடக்கு.

சின்னராசாசசிகுமார் சங்குவேலி வடக்கு-வில்பிறட் ஜெறாட் மானிப்பாய்-அன்ரனி ஜென்சன் ஈச்சமோட்டை-நாகராசா சுரேஸ் இணுவில் தெற்கு -பரமநாதன் சுபோதினி சித்தன்கேணி.

கணபதி சுபாஜினி கோப்பாய் மத்தி-துரைசிங்கம் ராதிகா நவாலி தெற்கு மானிப்பாய்-பாலசுப்பிரமணியம் நிமல்ராஜ் யாழ்ப்பாணம்-தவராசா உதயகுமார் சாவற்கட்டு மானிப்பாய்-செல்வராசாசோபிதன் கொக்குவில் மேற்கு கொக்குவில்.

தர்மரத்தினம் சர்மிலா அளவெட்டி மேற்கு-பாலசிங்கம் தீபன் சுன்னாகம்-நடராசா அருண்அரசன் நல்லூர் யாழ்ப்பாணம் -க. ஜெகநேசன் கரவெட்டி கிழக்கு- சின்னத்துரை வாசுகி அச்சுவேலி.

**க. பொ. த. (உ/த) மாணவர் விபரம்**

க. சிவனேசன் கரவெட்டி கிழக்கு-அல்லேலூயா மவுறிலியா நவாலி தெற்கு-அல்லேலூயா மேரிசுதர்சினி நவாலி தெற்கு-செல்வரத்தினம் ரூபவதனா கோப்பாய் மத்தி-தேவதாஸ் ஜெபதர்ஷன் ஈச்சமோட்டை-மகேஸ்வரன் கஜவதனி உரும்பிராய் கிழக்கு-இராசிமுத்து ஐறின் சர்மிலா யாழ்ப்பாணம்-செல்வரத்தினம் வட்சலகுமாரி நல்லூர் யாழ்ப்பாணம்-சண்முகம் தமிழினி ஆவரங்கால் கிழக்கு-சிவகுரு பவனத்துரை சண்டிலிப்பாய் வடக்கு -நாகமுத்து நந்தகுமாரி கரவெட்டி கிழக்கு-சின்னராசா ஸ்ரீபுஸ்பமலர் சங்குவேலி வடக்கு -நாகராசா துஷ்யந்தி இணுவில் தெற்கு-துரைசிங்கம் சுமிதா நவாலி தெற்கு.(உ-)

---

## திருட்டு

(யாழ்ப்பாணம்)

சுன்னாகம் தெற்கு ஸ்ரீ சிவபூதராஜர் தேவஸ்தானத்தில் நேற்று முன்தினம் 15 பவுண் நகை களவாடப்பட்டது.

(உ-2)

---

## அரசின் உண்மையற்ற நிலை

# தமிழ் இளைஞர் யுவதிகளை ஆயுதம் ஏந்தத் தூண்டுகிறது

## பல்கலை மாணவர் ஜனாதிபதிக்கு கடிதம்

(யாழ்ப்பாணம்)

இனங்களுக்கிடையே சமாதானத்தை ஏற்படுத்துவதற்கான ஒரே வழி, உடன் யுத்தத்தை நிறுத்தி தமிழ் மக்கள் ஏற்றுக்கொண்ட அவர்களின் ஏகபிரதிநிதிகளான தமிழீழ விடுதலைப்புலிகள் மீதான தடையை நீக்கி அவர்களுடன் பேச்சுக்களை ஆரம்பிப்பது தான்.

இவ்வாறு யாழ். பல்கலைக் கழக மாணவர் ஒன்றியத்தினால் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்கா குமாரதுங்கவுக்கு 11 ஆம்திகதியிட்டு அனுப்பி வைத்துள்ள மகஜரில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அம் மகஜரில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது.

கடந்த மே தினத்தன்று தங்களது மேதின உரையினை செவிமடுத்தோம். அச்செய்தி தமிழ் மக்களைப் பொறுத்தவரை ஏமாற்றத்தினையும் கவலையையும் அளிப்பதாகவே இருந்தது.

நாட்டில் சமாதானத்தினையும் ஐக்கியத்தினையும் ஏற்படுத்தப் போவதாக தாங்கள் அடிக்கடி கூறியவார்த்தைகள் எமக்கு சற்று மகிழ்ச்சியாக இருந்ததுண்டு ஆனால் கடந்த ஐந்து மாத காலத்தில் சமாதானத்திற்கான ஓர் சூழ்நிலை ஏற்பட்டிருந்தும் அதனை தாங்கள் சரியான முறையில் பயன்படுத்த தவறிவிட்டீர்கள்.

தங்களது உண்மையற்ற பேச்சுக்களின் மூலம் தமிழ் மக்களிடையே குறிப்பாக இளைஞர், யுவதிகளிடையே விரக்தி நிலையை தோற்றுவித்து வருவதோடு எம்மை பாதுகாக்க நாம் ஆயுதம் ஏந்த வேண்டும் என்ற மன உணர்வினையும் ஏற்படுத்தி வருகிறீர்கள்.

தயவு செய்து வன்முறை எண்ணத்தை எமது குழந்தைகளிடத்தில் தூண்டாதீர்கள் என்று கேட்டுக் கொள்கின்றோம் எனக்குறிப்பிடப்பட்டுள்ளது.

மேலும் அவ் மகஜரில்,

ஒரு புறம் யுத்த நடவடிக்கையை தீவிரப்படுத்திக் கொண்டு மறுபுறம் யாழ்ப்பாணத்திலும் ஏனைய வடக்கு-கிழக்கிலும் அபிவிருத்திகள் நன்கு சிறப்பாக நடைபெறுகிறது எனக் கூறிக் கொண்டிருக்கின்றீர்கள். யுத்தம் தீவிரமாக நடைபெறும் ஒரு பிரதேசத்தில் அபிவிருத்தி என்பது சாத்தியமில்லை என்பது தங்களுக்குத் தெரியாதா? எனவும் வினாஎழுப்பப்பட்டுள்ளது. (உ)

---

## ஐக்கிய வி. க. வெற்றி பெற்றது

வலி.கிழக்கு பிரதேச சபை எல்லைக்குட்பட்ட விளையாட்டுக்கழகங்களுக்கிடையே நடத்தப்பட்ட விளையாட்டு விழாவில் ஓர் அங்கமாக கடந்த வாரம் இடம்பெற்ற கரபந்தாட்ட போட்டியின் அரை இறுதி ஆட்டத்தில்நீர்வேலி ஐக்கிய விளையாட்டுக் கழக அணி அதனை எதிர்த்து ஆடிய ஜனசக்தி விளையாட்டு கழக அணியை 3 நேர்செற்றுகளில் 25:18, 25:22,25:20 என்ற புள்ளிகள் அடிப்படையில் வென்றது.

இன்னொரு அரையிறுதிப் போட்டியில் அச்சுவேலி விக்னேஸ்வரா விளையாட்டுக் கழகம் அதனை எதிர்த்து ஆடிய ஆவரங்கால் மத்திய விளையாட்டு கழக அணியை 3 நேர் செற்றுகளில் 25:20, 25:18, 25:21 என்ற புள்ளிகள் அடிப்படையில் வென்றது.

இப்போட்டியில் இறுதி ஆட்டத்தில் நீர்வேலி ஐக்கிய விளையாட்டு கழகம் அதனை எதிர்த்து ஆடிய விக்னேஸ்வரா விளையாட்டுகழக அணியைபலத்த போட்டிகளின்பின் 3 நேர்செற்றுகளில் 25:20, 25:18,25:22 என்ற புள்ளிகள் கணக்கில் வென்று சயபியன் ஆனது (உ-110)

## சினேகபூர்வ ஆட்டம்

(கொழும்புத்துறை)

யாழ்.மாவட்ட தெரிவு அணிக்கும் பருத்தித்துறை லீக்கில் அங்கம் வகிக்கும் கழகங்களின் தெரிவு அணிக்கும் இடையில் கடந்த செவ்வாய்க்கிழமை நெல்லியடி மகாவித்தியாலய மைதானத்தில் இடம்பெற்றசினேகபூர்வ உதைபந்தாட்டத்தில் யாழ். அணி 4:1 என்ற கோல்கணக்கில் வெற்றியீட்டியது.

இவ் ஆட்டத்துக்கு மத்தியஸ்தர்களாகக் எ. மெய்யழகன், எஸ். அருளானந்தசோதி, கே. கதிர்காமராஜ் ஆகியோர் கடமைஆற்றினார்கள். [உ-110]

## யாழ். அணி வென்றது

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்ட தெரிவு அணிக்கும், குருநகர் பாடுமீன் விளையாட்டுக்கழக அணிக்கும் இடையில் கடந்த 10 ஆம் திகதி துரையப்பா விளையாட்டு அரங்கில் இடம் பெற்ற உதைபந்தாட்டத்தில் யாழ். அணி 2:0 என்றகோல் கணக்கில் வெற்றியீட்டியது.

இவ் ஆட்டத்துக்கு மத்தியஸ்தர்களாக ரி. யூட்மன், எ. தமிழினியன், பி. சுரேஸ் ஆகியோர் கடமை ஆற்றினர். (உ-110)

---

## அம்மனின் நகைகள் களவு

[யாழ்ப்பாணம்]

கொக்குவில் நந்தாவில். கற்புலத்து மனோன்மணி அம்பாள் ஆலயத்தில் கடந்த வெள்ளி இரவு அம்பாளின் நகைகள் சூறையாடப்பட்டுள்ளன.

கூரையைப் பிரித்து உள்ளே இறங்கிய திருடர்கள் அம்மனிற்கு சாத்தப்பட்டிருந்த நகைகளையும் உண்டியலில் இருந்த பணத்தினையும் களவாடிக் கொண்டு தப்பிச் சென்றுவிட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. (உ 104)

---

# பிந்துனுவெவ படுகொலை விசாரணைகள் ஆரம்பம்

(கொழும்பு)

பண்டாரவளை பிந்துனுவெவ புனர்வாழ்வு நிலையப் படுகொலை சம்பந்தமான விசாரணைகளை மேற்கொண்டுவரும் ஆணைக்குழுவின், விசாரணைகள் நேற்று முன்தினம் சர்வதேச பண்டாரநாயக்க ஞாபகார்த்த மண்டபத்தில் நடைபெற்றது.

நேற்று முன்தினம் இடம்பெற்றவிசாரணையின் போது இருவர் சாட்சியமளித்துள்ளனர்.

பதுளை மாவட்ட பிரதேச செயலாளர் சிறிகுணவர்த்தனா சாட்சியமளிக்கையில் பண்டாரவளை புனர்வாழ்வு முகாம் தாக்கப்பட்ட சம்பவத்தை பிரதேச மக்கள் எனக்கு அறிவித்திருந்தனர்.

இதனையடுத்து தான் தொடர்பு கொண்ட போது இச்சம்பவங்கள் பற்றிதமக்கு ஏதும் தெரியாதென கூறியிருந்தனர். இச் சம்பவம் தொடர்பாக தான் ஜனாதிபதிக்கும்,மாகாண ஆளுநருக்கும் தகவல் கொடுத்திருந்தேன் என்று தெரிவித்துள்ளார்.

பதுளை மாவட்ட சட்டவைத்திய அதிகாரி ரூபசிங்கா சாட்சியமளிக்கையில்,

இச்சம்பவத்தில் கொல்லப்பட்ட சிவஞானசுந்தரம் சிவரூபன் என்பவரது சடலத்தை பிரேத பரிசோதனைக்கு உட்படுத்தியபோது.

இவரது உடலில் 15 வெட்டுக் காயங்களும், தீக்காயங்களும் இருப்பதைக் காண முடிந்தது கூரிய ஆயுதமொன்றினால் இவரது மூளைப் பகுதி வெட்டப்பட்டிருந்ததாகவும் அவர் சாட்சியத்தின் போது தெரிவித்திருந்தார்.

மற்றும் ஒருவரான புண்ணியமூர்த்தியின் சடலத்தை பரிசோதித்தபோது அவரது உடலில் 19 வெட்டுக் காயங்களும், எரிகாயங்களும் காணக்கூடியதாக இருந்தன. இவரது உடலில் சூட்டுக் காயம் எதுவும் காணப்படவில்லை என்று சாட்சியத்தில் குறிப்பிட்டார். (ம)

---

# யாழ். உயர் தொழில்நுட்ப கல்லூரிக்கு காணி கொள்வனவுகுறித்துபேச்சு

[யாழ்ப்பாணம்]

யாழ். உயர் தொழில்நுட்ப கல்லூரி நிர்வாகிகள் மற்றும் மாணவர்கள் காலை ஈ.பி.டி.பியின் யாழ். மாவட்ட தலைமைச் செயலகத்தில் அமைச்சர் டக்ளஸ்தேவானந்தாவை சந்தித்துப் பேச்சு நடத்தியுள்ளார்கள்.

கல்லூரிக்குரிய காணி ஒன்றினைக் கொள்வனவு செய்வது ஊழியர்களுக்குரிய இடர் காலக் கொடுப்பனவுகளை வழங்குவது மற்றும் கல்லூரிக்குரிய அவசிய ஆளணி வெற்றிடங்களை நிரப்புவது போன்ற விடயங்கள் குறித்து இச்சந்திப்பின் போது கலந்துரையாடப்பட்டது.

மேலும் கல்லூரிக்கு நூல்கள் மற்றும் தளபாடங்கள் கொள்வனவு செய்வதற்கு உதவும் படியும் அமைச்சரிடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

முன்வைக்கப்பட்ட மேற்படி கோரிக்கைகள் தொடர்பாக உயர் கல்வி அமைச்சின் உயர் அதிகாரிகளுடன் பேச்சு நடாத்தி விரைவில் மாணவர்கள் மற்றும் நிர்வாகத்தினது கோரிக்கைகளை நிறைவேற்றித் தருவதாக உறுதியளித்துள்ளார். [உ]

## இன்று ஒரு தகவல்

# மரணத்தை வெல்வதால் அடையும் இலாபம்என்ன?

என்றோ ஒரு நாள்மனிதன் மரணத்தை வென்றுவிடுகின்றான் என்று வைத்துக்கொள்வோம். அப்போது இந்த உலகம் எப்படி இருக்கும்? உலகம் இப்போது எப்படிஇருக்கிறது? இன்றைக்கு இருக்கும் ஒருவர் நாளைக்கு நம்மிடையே உயிரோடு இருப்பாரென்று உறுதியாகஎண்ண'முடிவதில்லை. ஏனெனில், நேற்றிருந்த பலர் இன்றைக்கு இல்லாமல் போய் விட்டார்கள். வாழ்க்கையிலிருந்து வரும் இந்த நிலையாமையை எண்ணும்போது, நமக்குக் கொஞ்சம் வருத்தமாகத் தானிருக்கிறது. இருந்தாலும் நாம் சற்றுச் சிந்தித்துப் பார்ப்போமானல், இந்த நிலையாமையில் தான் வளர்ச்சி இருக்கிறது அழகு இருக்கிறது. இன்பமும் இருக்கிறது என்பது தெளிவாகத் தெரியும். எப்படி?

ஒரு பூந்தோட்டத்தில் பல விதமான மரம், செடி, கொடிகள் இருக்கின்றன மலர்களும், பிஞ்சுகளும், காய்களும், கனிகளும் அங்கு நிறைந்து காணப்படுகின்றன. எனவே அப் பூந்தோட்டம் பார்ப்பதற்கு மிக அழகாக விளங்குகிறது. அந்த அழகான தோட்டத்தில் அபூர்வமான செடி ஒன்று பயிரிடப்பட்டிருக்கிறது. அந்தச் செடியில் கண்ணைக்கவரும் வண்ணப் பூக்கள் பூத்துக் குலுங்குகின்றன. ஆனால் அந்தப் பூக்கள் எதுவுமே தானாகத் தரையில் உதிர்வதில்லை. மனிதர்களாலும் அதைப் பறிக்க முடிவதில்லை. எத்தனை ஆண்டுகளானாலும் அந்தப் பூக்கள் செடியை விட்டு அகலாமல், அகற்றப்பட இயலாமல் வாடாமல், வதங்காமல் அதிலேயே நிரந்தரமாக இருந்து கொண்டிருக்கும். இப்படியிருந்தால் இப்பூக்களால் யாருக்காவது பயனுண்டா? ஏன் அந்தச் செடிக்காவது அவற்றால் வளர்ச்சி உண்டா?

பூக்கள் பூக்களாகவே இருந்து விடுமானால், அவற்றிலிருந்து பிஞ்சுகள் உண்டாக மாட்டா. பூ பிஞ்சாகி, பிஞ்சு காயாகி, காய் கனியாகும் போது தான் ஒரு மரமோ செடியோ தன் பிறவிப் பயனைப் பெறுகிறது. அதில் தான் அதனுடைய வளர்ச்சியும் இருக்கிறது. இப்படி இல்லாமல் மலர் அளவிலேயே அது என்றைக்கும் இருந்து விடுமானால் அதன் வளர்ச்சியும் அதோடு நின்று விடுகிறது. எனவே வாடாத மலர்களையுடைய ஒரு செடியானது வளர்ச்சியற்ற செடியாகவே இருந்து விடும். 'அப்படி இருப்பது இயற்கையின் முறை அல்ல. ஆகையால் மலர்கள் வாடி உதிர்கின்றன. காய்கள் பழுத்து வீழ்கின்றன.

இன்று காலையில் பூத்த மலர்கள் நாளைக்காலையில் உதிர்ந்துபோய் அவற்றிற்குப் பதிலாக அங்கு புதிய மலர்களைப் பார்க்கும் போது தான் மனிதஉள்ளம் மகிழ்ச்சி அடைகிறது. அந்தச் செடியும் அப்போது தான் வளர்ச்சி அடைகிறது. இப்படியில்லாமல் ஒரு நாள்பூத்த மலர்களே தொடர்ந்து பல நாட்களுக்கு உதிராமலிருந்து வருமானால் நமக்கு அந்தச் செடியையே பிடிக்காமல் போய்விடும்! இல்லையா? வாடாத மலர்ச்செடிகளே ஒரு தோட்டம் முழுவதிலும் பயிர் செய்யப்பட்டிருக்குமானால், அந்தத்தோட்டத்தையே பார்க்கப்பிடிக்காமல் போய் விடும். காரணம், மனித உள்ளம் எப்போதும் மாறுதலையே விரும்புகிறது.

நமது மனம் எந்த நேரமும் ஒரே எண்ணத்தை எண்ணிக் கொண்டிருப்பதில்லை. நிமிஷத்துக்கு ஆயிரம் எண்ணங்கள் அதில் வந்து போகின்றன. இது மனத்தின் இயல்பு. மனத்துக்குப் புதுப்புது எண்ணங்கள்வேண்டும்; கண்ணுக்குப் புதுப் புதுக் காட்சிகள் வேண்டும்; நாவுக்குப் புதுப் புது சுவைகள் வேண்டும். இதுவே மனித இயல்பு. இந்த அடிப்படையில் தான் உலக இயல்பும் அமைந்து நிற்கிறது.

நன்றி
கல்கண்டு
05-01-1967

# அரசியல் திருத்த சட்டப்பிரேரணை அடுத்த மாதம் கொண்டு வரப்படும

## எதிர்க்கட்சிகள் கூட்டாக முயற்சி

(கொழும்பு)

எதிர்க்கட்சிகள் கூட்டாக இணைந்துஅரசியல் திருத்த சட்டப் பிரேரணையை அடுத்த மாதம் கொண்டு வருவதென்று நேற்று முன் தினம் தீர்மானித்துள்ளன.

இப்பிரேரணைகளில் மக்கள் விடுதலை முன்னணியில்

★ அரச ஊடக ஆணைக் குழுவொன்றை நிறுவுதல்.

★ காபந்து அரசின் கீழ் தேர்தல்களை நடத்துதல் ஆகிய இரு பிரேரணைகளும் சேர்க்கப்பட்டுள்ளன.

இது தொடர்பாக மக்கள் விடுதலை முன்னணியின் பேச்சாளர் ஒருவர் கருத்துத் தெரிவிக்கையில், ஜனாதிபதித் தேர்தலும் பாராளுமன்றத் தேர்தலும் ஒரே நாளில் நடத்தப்பட வேண்டும்.

காபந்து அரசில் சபாநாயகர், பிரதம நிதியரசர்மற்றும் ஐ தே. கட்சியின் பிரேரணைகளில் அடங்கியிருக்கும் நான்கு ஆணைக் குழுக்களின் பிரதிநிதிகளும் அங்கம்வகிக்க வேண்டுமெனத் தெரிவித்தார்.

இக் கூட்டம் நேற்று முன் தினம் ஐ தே. கட்சியின் பிரதித்தலைவர் கருஜயசூரிய தலைமையில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் சிஹல உறுமயக் கட்சி தவிர்ந்த ஏனைய எதிர்க்கட்சிகள் அனைத்தும் கலந்து கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். (ந)

# விழிப்புணர்வு கருத்தரங்கு

(ஈச்சமோட்டை)

யாழ்ப்பாணம் நாவாந்துறை இளைஞர் யுவதிகளை ஒன்றிணைத்துயாழ். கியூடெக் நிறுவன சமூக விழிப்புணர்வுக் குழுவினரால் விழிப்புணர்வுக் கருத்தரங்கொன்று கடந்த ஞாயிறன்றுநடாத்தப்பட்டது

விழிப்புணர்வுக்குழு இணைப்பாளர் யோசப்பாலா ஊக்குவிப்பாளர் செல்வி சுரேதினி இவ்விழிப்புணர்வுக்கருத்தரங்கை வழிநடத்தினர்

இளையோர் இன்று சமூக மட்டத்தில் எதிர்கொண்டிருக்கும் பிரச்சினைகள் பற்றி இக் கருத்தரங்கில்ஆராய்ந்ததோடு அதை எவ்வாறு நிவர்த்திசெய்யலாம் என்பதுகுறித்த நலத்திட்டங்களும்தீட்டப்பட்டன.

அத்துடன் அன்றையதினம் அப் பகுதி இளைஞர்யுவதிகள் சிரமதானப்பணியைமேற் கொண்டனர். (உ-59)

# தொடர்பு கொள்ளவும்

(யாழ்ப்பாணம்)

கீழே பெயர்கள்குறிப்பிடப் பட்டுள்ளவர்களை சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்துடன் தொடர்பு கொள்ளுமாறு அறிவிக்கப் பட்டுள்ளது;

சிவஞானம்- சிவதுர்க்கா. ராமலிங்கம்- சிவஞானம். சாவகச்சேரி தெறகு, சாவகச்சேரி.

குமாரவேலு - துரைரட்ணராஜா. கலியாணக் குளம் எழுதுமட்டுவாள் வடக்கு.

சொக்கநாதன் - பரமேஸ்வரி, சொக்கநாதன் - கவிதா சொக்கநாதன் - சசிகரன் சொக்கநாதன்- அகிலா. சரசாலை தெற்கு சாவகச்சேரி

திருமதி தாமரைப் பிள்ளை பாக்கியம். மந்துவில், கொடிகாமம். (உ)

# மரம் நாட்டல்

உலக செஞ்சிலுவைத் தினத்தை முன்னிட்டு கடந்த செவ்வாய்க்கிழமை இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தின் வலி-வடக்கு பிரிவுச்செயலகத்தில் செஞ்சிலுவைச் சங்க ஸ்தாபகர் ஜீன் ஹென்றி டுனான் அவர்களின் திருவுருவப்படத்திற்கு மலர்வணக்கம் செலுத்தப்பட்டு செயலக வளவில் யாழ். கிளைப்பிரதிநிதிகளால் பயன்தரு மரக்கன்றுகள் நாட்டப்பட்டன.

அதனைத்தொடர்ந்து தெல்லிப்பழை மகாஜனாக்கல்லூரி மாணவருக்கான முதலுதவிப் பயிற்சி நெறியொன்றும் அங்குரார்ப்பணம்செய்துவைக்கப் பட்டு செயன்முறையுடன் கூடிய முதலுதவிப் பயிற்சி வகுப்பு தொடர்ந்து நடைபெறுவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டது. (உ-12)

# திருமறைக்கலாமன்றத்தின் தமிழ்விழா இன்று நிறைவு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் திருமறைக் கலாமன்றம், கொழும்பு, திருகோணமலை, ஹப்புத்தளை திருமறைக் கலாமன்றக் கலைஞர்களுடன் இணைந்து நடத்திவரும் முத்தமிழ் விழாவின் இறுதி நாளான இன்றைய நிகழ்வுகள் இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரியில் மாலை 6 மணிக்கு ஆரம்பமாகவுள்ளன.

கலை நிகழ்வுகளாக திருமறைக்கலாமன்ற இளவாலைக் கிளையினர் வழங்கும் ''மன்னிப்பு'' சிறுவர் நாடகம் மற்றும்,

திருமறைக் கலாமன்றக் கலைஞர்கள் வழங்கும் ''சோழன் மகன்''.

கொழும்பு திருமறைக் கலாமன்றம் வழங்கும் 'கீறல்கள்''.

திருகோணமலை திருமறைக்கலாமன்றம் ழங்கும் ''பொறி''.

ஹப்புத்தளை திருமறைக் கலாமன்றம்வழங்கும் நிலவுக்குள் ஒரு அமாவாசை ஆகிய நாடகங்கள் இடம்பெறவுள்ளன. (உ-59)

# மக்கள் வங்கியின் நடமாடும் சேவை

(யாழ்ப்பாணம்)

புங்குடுதீவுப் பாடசாலை அதிபர்கள் வேலணைப் பிரதேச செயலகத்தினூடாக விடுத்த வேண்டுகோளைத் தொடர்ந்து ஒழுங்கு செய்யப்பட்ட மக்கள வங்கி ஊர்காவற்றுறைக் கிளையின் நடமாடும் சேவை, 15 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 9 மணி முதல் புங்குடுதீவு மகாவித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது.

இச் சேவையின் போது இப்பகுதியிலுள்ள நான்கு பாடசாலை மாணவர்களுக்கும் மக்கள் வங்கி அதிகாரிகளால் சேமிப்பின் அவசியம்'' பற்றி கருத்துரைகள் வழங்கப்படவுள்ளன (உ)

# பொது மக்களுக்கான உதவித் திட்டங்கள்

(யாழ்ப்பாணம்)

அகதிகள் புனர்வாழ்வு நிறுவனத்தினால் யாழ். குடாநாட்டின் பல்வேறு பகுதிகளிலும், பொதுமக்கள்- கடனுதவி, வைத்திய உதவி, கல்வி உதவித் திட்டங்களின் கீழ்,

கடந்த வருடம் தொடக்கம் இவ்வருட மார்ச் மாதம் வரையான காலப்பகுதியில் சுழற்சிமுறைக் கடனாக 3 இலட்சத்து 52 ஆயிரம் ரூபாவும்,

சுய முயற்சிக் கடனாக 3 இலட்சத்து 10 ஆயிரம் ரூபாவும் வழங்கப்பட்டுள்ளது. (உ-122)

# மக்கள் போக்கு வரத்துக்கு படையினர் கட்டுப்பாடு

(ஏறாவூர்)

மட்டக்களப்பு மாவட்டத்தில் காவத்தைமுனை மற்றும் கிரான் ஆகிய பிரதேசங்கள் ஊடாக விடுவிக்கப்படாத பகுதிகளுக்கான பொதுமக்களின் போக்குவரத்து கடந்த வியாழன்முதல்படையினரால் கட்டுப்படுத்தப்பட்டுள்ளது.

இதையடுத்து வாகனேரி மற்றும் பெண்டுகள்சேனை போன்ற வயற்பிரதேசங்களுக்கு செல்லும்விவசாயிகள் பெரும் அசௌகரியங்களை எதிர் நோக்குவதாக தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை கிரான்பகுதியில் வீதிப்பாதுகாப்பு நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த இராணுவத்தினர் மீது விடுதலைபபுலிகள் கடந்த வியாழனன்று நடத்திய சினைப்பர் தாக்குதலில் சிப்பாய் ஒருவர் காயமடைந்துள்ளார். (உ-108)

# சமாதானத்தை வலியுறுத்தி கையெழுத்து வேட்டை

## ஜனநாயக இ. மு. ஏற்பாடு

(கொழும்பு)

அரசும், தமிழீழவிடுதலைப் புலிகளும் விரைவாக சமாதானப் பேச்சுக்களை ஆரம்பிக்க வேண்டுமெனக் கோரியும், இனவாதத்தை தூண்டுவோருக்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் வகையிலும் பொது மக்களிடம் கையெழுத்து சேகரிக்கும் முயற்சியில் ஜனநாயக இடதுசாரி முன்னணி ஈடுபடவுள்ளது.

மக்கள் மத்தியில் சமாதானத்தின் மகிமையை உணர்த்தவும் அவர்களை சமாதான வழியில் வழி நடத்தவும், பேச்சுவார்த்தைக்கு எதிராக மேற் கொள்ளப்படும் நடவடிக்கைகளுக்கு எதிர்ப்புத் தெரிவிப்பதுமே, கையெழுத்து வேட்டையில் ஈடுபடுவதன் நோக்கமென்று கட்சியின் தேசிய அமைப்பாளர் வாசுதேவநாணயக்கார தெரிவித்துள்ளார்.

இதேவேளை அடுத்தவாரம் கொழும்பு மாநகரில் பொது மக்களிடம் கையெழுத்து சேகரிக்கும்நடவடிக்கை ஆரம்பமாகவுள்ளது.

தெற்கில் பேச்சுவார்த்தை நடைபெறுவதை எதிர்த்து, சிஹல உறுமயக் கட்சி கையெழுத்து வேட்டையில் ஈடுபட்டிருந்தமையும்வாசகர் அறிந்ததே. [இ]

# வடபகுதிக்கான கப்பல் பயணிகளுக்கு புதிய நடைமுறைகள்

(திருமலை)

வடபகுதி செல்லும் கப்பல் பயணிகளைத் தெரிவு செய்வதில் படையதிகாரிகள் தற்போது புதிய நடைமுறை ஒன்றைப் பின்பற்றி வருகின்றனர்.

புதிய நடைமுறையின் பிரகாரம் வடபகுதியிலும் கப்பல் பயணிகளுக்கான நேர்முகப்பரீட்சை நடத்துவதற்கான டோக்கன்கள விசாரணை நடைபெறும் தினத்திற்கு முதல் நாள கப்பல் பயணத்திற்கு பதிவு செய்து விண்ணப்பிதது பெற்றுக கொள்ளலாம என்று கபபல் பயண பொறுபபதிகாரி எஸ். வரதராசா தெரிவித்துள்ளார்.

வடபகுதி செல்லும் யாழ் பயணிகளுக்கான நேர்முகப் பரீட்சைகள் வழமையாக செவ்வாய், சனி ஆகிய தினங்களில் திருமலை பிரதேச செயலத்தில நடைபெற்று வந்ததுடன் நேர்முகப் பரீட்சை நடைபெறும் தினத்தன்றே இதுவரை காலமும் டோககனகள பயணிகளுக்கு வழங்கபபட்டுவந்தது

தற்போதைய புதிய நடைமுறைபபடி பிரதி செவ்வாய்க் கிழமைகளில் நடைபெறும நேர்முகபபரீட்சைகளுககு டோக்கன்கள திஙகளி பகல4 00மணிககும,

சனிககிழமைகளில நடைபெறும நேர்முகபபரீட்சைக்கான டோகன்கள வெள்ளிககிழமைகளிலும வழங்கப்படும். (ம)

# தொலைக்காட்சி அன்பளிப்பு

(யாழ்ப்பாணம)

காரைநகர் விளையாட்டு சனசமூக நிலையத்திற்கு. அப்பகுதி மக்களின் நன்மை கருதி வடககின் புனர்வாழ்வு அமைச்சின் நிதியில் இருந்து ஒரு இலட்சதது 75 ஆயிரம ரூபா செலவில் தொலைக் காட்சிப்பெட்டி. டெக் என்பன இன்றைய தினம் வழங்கப்படவுள்ளன. (உ-6)

# ஆந்திர பா.ஜனதாக் கட்சித்தலைவர் நக்சலைட்டுகளால் சுட்டுக் கொலை

ஆந்திரப் பிரதேச பாரதிய ஜனதாக் கட்சித் தலைவர் ஆர். சுரேந்திராவை நக்சலைட்டுகள் சுட்டுக் கொன்றனர்.

ஆந்திரப் பிரதேசத்தில் தடைசெய்யப்பட்ட இயக்கத்தைச் சேர்ந்த இருவர் காமா ரெட்டி நகரிலுள்ள அவரது இல்லத்தில் வைத்து நேற்றுக் காலை சுரேந்திராவை சுட்டுக் கொன்றிருப்பதாக தெரிய வந்துள்ளது.

மிகக் கிட்ட இருந்து சுட்டதால் ஸ்தலத்திலேயே சுரேந்திரா பலியானார்.

இம் மரணத்தை அடுத்து நகர் முழுவதும் நேற்றும் இன்றும் பூரண கதவடைப்புப் போராட்டம் அனுஷ்டிக்கப்பட்டது. (து).

# சீனப் பிரதமரின் பாகிஸ்தான் விஜயம் பயனுள்ள ஒப்பந்தத்தை உருவாக்கும்

(இஸ்லாமபாத்)

சீனப் பிரதமர் நான்கு நாள் பயணமாக பாகிஸ்தான் சென்றபோது இஸ்லாமாபாத் விமான நிலையத்தில் பாகிஸ்தான் இராணுவ ஆட்சித் தலைவர் ஜெனரல் முஷாரப் வரவேற்றார்.

அதிபர் மாளிகைக்குச் செல்லும் பொழுது சிறுவர்கள் பாதையின் இருமருங்கும் நின்று இரு நாட்டுக் கொடிகளையும் அசைத்து சீனப் பிரதமரை வரவேற்றதுடன், மரியாதைப் பீரங்கி வேட்டுக்களும் தீர்க்கப்பட்டன.

நான்கு நாட்கள் இஸ்லாமபாத்தில் தங்கி நிற்கும் சீனப் பிரதமர் இரு நாடுகளுக்குமிடையிலான பல பேச்சுக்களில் ஈடுபட இருக்கிறார்.

பொருளாதாரம், தொழில்த்துறை, கல்வி, வர்த்தகம் போன்ற துறைகளில் இரு நாடுகளும் ஒப்பந்தங்கள் செய்து கொள்ள இருப்பதாக கூறப்படுகிறது. (து)

## சீனாவில் பஸ் விபத்து 14 பேர் பலியாகினர்

(பீக்கிங்)

சீனாவின் வட மேற்குப் பகுதியில் பஸ்ஒன்று விபத்துக்குள்ளானதில் 14 பேர் பலியாகினர்.

விபத்துக்குள்ளான குறிப்பிட்ட பஸ்ஸில் 19 பயணிகளே பயணம் செய்யக்கூடியதாக இருந்த போதும் 31 பயணிகள் பயணம்செய்ததாகவும் இதனால் மலைச்சாரல் பாதையில் பஸ் சென்று கொண்டிருந்த வேளை வீதியில் தடம் புரண்டு மலையில் இருந்து பஸ் வீழ்ந்துள்ளது எனவும் தெரிவிக்கப்படுகிறது. (உ-7)

## வாகனவிபத்தில் சிக்கி பதினொரு பேர் மரணம்

[கல்கத்தா]

மும்பை வீதி விபத்தொன்றில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த பதினொரு பேர் ஸ்தலத்திலேயே பலியாகியுள்ளனர்.

ஒரே குடும்பத்தைச் சேர்ந்த 13 பேர் குஜராத் நோக்கி வாகனத்தில் சென்று கொண்டிருக்கையில் கனரக லொறி ஒன்றுடன் மோதியதில் இந்த கோர சம்பவம் இடம்பெற்றது.

இந்த விபத்தில் நான்கு ஆண்களும் மூன்று பெண்களும் நான்கு சிறுவர்களும் பலியாகினர்.

இரு சிறுவர்கள் மாத்திரம் பலத்த காயங்களுடன் மருத்துவ மனையில் சிகிச்சை பெற்றுவருகின்றனர். (து)

## மிஸ் யூனிவேஸ் அழகியாக மத்திய அமெ.பெண்தெரிவு

(வாஷிங்டன்)

இந்த ஆண்டின் மிஸ் யூனிவேஸ் அழகிப் போட்டியில் இந்திய அழகி செயினா பெஸ்சிக்கு ஐந்தாம் இடம் கிடைத்துள்ளது.

மத்திய அமெரிக்க நாடான போட்டோ ரிக்கோவைச் சேர்ந்த இருபதுவயது டெனிஸ் குயினஸ் ஆக்கஸ் மிஸ் யூனிவேஸ் பட்டத்தை வென்றுள்ளார்.

போட்டியில் 70 நாடுகளைச் சேர்ந்த அழகிகள் பங்குபற்றினர். (து)

## மலேசிய-கியூப அதிபர்கள் முக்கிய பேச்சு

(கோலாலம்பூர்)

மலேசிய அதிபர் மகதீர் முகமட்டும் கியூபா அதிபர் பிடல் கஷ்ேராவும் முக்கிய பேச்சுகளில் ஈடுபட்டு வருகின்றனர்.

அரசமுறைப் பயணமாக மலேசியா சென்றுள்ள கியூபா அதிபரும் மிகிர் முகமட்டும் பழம்பெரும் அரசியல் வாதிகள என்பதால் இருவருடைய பேச்சுக்களும் நாடுகளை அமைதிமுறையில் வளர்ப்பதற்கு பயன்படும் என்று செய்தியாளர்கள் தெரிவிக்கின்றனர்.

அமெரிக்காவின் இன்றைய போக்குப்பற்றி இருநாட்டுத் தலைவர்களும் ஒத்த கருத்துடையவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது. (து)

## மின்சாரத்தில் இயங்கும் கார் இந்தியாவில்உற்பத்தி

பெங்களூர் ஒறகா நிறுவனம் மின்சாரததில் இயங்கும் கார் ஒன்றை அறிமுகப்படுத்தியுள்ளது.

சுற்றாடல் பாதிக்கப்படாத வகையிலும் சூழல் மாசடையாமலும் இயங்கக்கூடிய இந்தக் கார் இந்தியாவிலே முதல் முறையாக உருவாக்கப்பட்டுள்ளது.

பெரிய பற்றறியினால் இயங்கக்கூடிய இந்தக்காரை, ஆறாண்டு ஆராய்ச்சியின் பயனாக எஸ். கே. மேனன் என்பவர் உருவாக்கியுள்ளார். (து)

## இரண்டாம் உலக யுத்த காலத்து குண்டு வெடித்து சிறுவன் பலி

(ஜகார்த்தா)

இரண்டாம் உலக யுத்தத்தில் தயாரிக்கப்பட்ட குண்டு வெடித்ததில், இந்தோனேசியாவில் சிறுவன ஒருவன் கொல்லப்பட்டுள்ளதுடன் இருவர் காயமடைந்துள்ளனர்.

இந்தோனேசியாவில் புளோரஸ் தீவின் ஆற்றங்கரையிலிருந்து இக் குண்டைகண்டெடுத்த சிறுவர்கள் பந்து எனக் கருதி அதனை விளையாடிய பின்னர் நெருப்பில் எறிந்த போது அதனை மீட்டெடுக்கசென்ற மற்றைய சிறுவனே குண்டுவெடித்ததில் ஸ்தலத்தில் பலியாகியுள்ளான்.

இத்தீவுப்பகுதி 1939-1945 ஆம் ஆண்டு காலப்பகுதிகளில் ஜப்பானிய படைவசம் இருந்தமை குறிப்பிடத்தக்கது. (உ-3)

## செய்திச்சாரல்

★ உலகிலே அதிக சனத்தொகையை கொண்ட 5 வது நாடாக பிறேஸில் விளங்குகிறது.

★ அமெரிக்க ஜனாதிபதி புஷ், 11 சமஷ்டி நீதிபதிகளை நியமித்து செனட்டின் அங்கீகாரத்துக்குஅனுப்பியுள்ளார்.

★ நேபாளததில் ஒட்டிப் பிறந்த இரட்டைக்குழந்தைகள தமது முதலாவது பிறந்த தினத்தை சிங்கப்பூர் வைத்தியசாலையில கொண்டாடியுள்ளனர்.

★ பெனின் பொலிஸார், அடிமை வேலைக்காக ஆபிரிக்க பிள்ளைகளை கடத்தி வந்த10பேரைக் கைது செய்துள்ளனர்.

★ பனாமாவில் பஸ் கட்டணம் அதிகரிக்கப்பட்டதனால் மாணவர்களும், தொழிலாளர்களும்எதிர்த்துபோராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

★ பிரிட்டிஷ் பிரதமர் தேர்தலில் கன்சர்வேட்டிவ் கட்சியை விட 24 புள்ளிகள் அதிகம் பெற்றிருப்பதாக சமீப வாக்கெடுப்புகள் சுட்டிக் காட்டியுள்ளனர். (உ-3

## அன்னை ..

(7-ம் பக்கத் தொடர்ச்சி)

றினாள். அவளே பாத்திமா அன்னை,

பிள்ளைகளே நீங்கள் பயப்பட வேண்டாம், நான் உங்களின் தாய்உங்களுக்கு தீங்கு ஏதுவும் செய்யமாட்டேன் என்று அன்பு மொழியால் அழைத்தாள் அன்னை. சிறுவர்களுக்கு வேர்வை உடலை நனைத்தது. ஓடவும்முடியவில்லை நீயார்என்று கேட்கவும் முடியவில்லை. தொண்டைக்குழியில் வார்த்தைகள் உறைந்து விட்டன.

### லூசியா பேசினாள்

இம் மூவருள்ளும் லூசியா கொஞ்சம் மூத்தவள் விபரம் தெரிந்தவள் பதட்டத் தொனியுடன் 'அம்மா நீங்கள் எந்த ஊர்'' என்று வினவ நான் மோட்சத்தில் இருந்து வந்திருக்கிறேன் என்றாள் அன்னை உரையாடல் தொடர்ந்து. 'இங்கே என்ன செய்ய வந்திருக்கிறீர்கள்,, என்றாள். லூசியா ஒவ்வொரு மாதமும் 13 ஆம் திகதி இதே நேரத்திற்கு உங்களை இங்கு வரும்படி அழைக்க வந்துள்ளேன். ஐப்பசி மாதம் 13 ஆம் திகதி நான் யாரென்பதையும் உங்களிடம் எனக்கு வேண்டியது என்ன என்பதையும் அறிவிப்பேன்' என்றாள் அன்னை பாத்திமா. 'அம்மா நீங்கள் மோட்சத்தில் இருந்து வந்திருக்கிறீர்களா? அப்படியானால் நானும்அங்குவரலாமா என்றாள். ஆம் நீஅங்குவந்து சேருவாய் யசிந்தாவும், அங்கு வருவாளாம்மா?'

'ஆம் அவளும் அங்கு வருவாள்'

'பிரான்ஸில்' 'ஆம் அவனும் உங்களுடன் வருவான்.,

இவ்வாறு உரையாடல் தொடர பதட்டம் தளர்ந்தது. அன்னை மறைந்தாள் மூவரும் கிராமத்திற்குவிரைந்தார்கள். மக்களுக்கு சொன்னார்கள். மக்கள் அதனைநம்ப மறுத்தாலும் மூவரும் சொல்கிற படியால் சிலவேளை ஏதேனும் நிகழ்ந்திருக்கும்என நினைத்து ஆனி 13 ஆம்திகதி அந்த 'ஷேன்' மரத்திற்கு விரைந்தார்கள். அதே நேரம் நண்பகல் திருந்தாதி ஒலிக்க அன்னை தோன்றினாள் ! லூசியா அன்னையின்அருகில் சென்று உரையாடினாள்: ''அம்மா உங்களுக்கு என்னிடமிருந்து என்ன வேண்டும்'' என்றாள் லூசியா ; வரும் 13 ஆம் திகதி நீங்கள் இங்கு மீண்டும் வரவேண்டும். எனக்கு செபமாலை சொல்ல வேண்டும். என்றாள். சொன்னதும் மறைந்தாள்.

### செய்தி பரவியது

இச்செய்தி போர்த்துக்கல், மற்றும் அதனை அண்டிய நாடுகளிற்கும் பரவியது. மக்கள் கடலென விரைந்தார்கள். விசுவாசிகள் நம்பினார்கள். அவ் விசுவாசிகள் பொய் என்று பிரசாரம் செய்தார்கள. பிள்ளைகளின் மனநிலை சரியா? என்று ஆய்வு நடத்தினார்கள். குழந்தைகளின் மனநிலையில மாற்றமில்லை என்று தெரியவந்தது.

ஐப்பசிமாதம் 13 ஆம் திகதி வநதது. ஐம்பதாயிரம் பேருக்குமேல் அன்னையைக் காணக் கூடி நின்றார்கள், ஆனால்வளமைக்கு மாறாக வெப்பம் தணிந்து கருமேகம்சூழ்ந்தது. மழை பெய்யத் தொடங்கிதுய. விடவே இல்லை. லூசியாவோ, அன்னையின்வரவிற்காய் செபித்துக்கொண்டுநின்றாள். ஆள் திடீரென 'ஆ அதோ அன்னை அதோ என் அம்மா நான் அவளைக் காண்கிறேன்' என்று ஆனந்தக் கூக்குரல் போட்டாள்.

### செபமாலை நாயகி

அவளின் வழமையான வார்த்தை அவளின் வாய்களில் பிறந்தன. 'அம்மா நீங்கள் யார்? நீங்கள் என்னிடம் கேட்பது என்ன' என்றாள். 'நானே செபமாலை நாயகி விசுவாசிகளின்வாழ்வில் குறை கேட்க வந்துள்ளேன்.

அன்னை இல்லா உயிர்களுக்கும் நானே அன்னை. ஆண்டவருக்குதுரோகம் செய்யும் ஒவ்வொருவருக்கும் அவரின் அன்பையும் விசுவாசத்தையும எடுத்தியம்பவே வந்துள்ளேன். செய்த பாவங்களுக்காக மனம் வருந்தி இறைவனை நாள்முழுதும பிரார்த்தியுங்கள் எனக கேட்க வந்துள்ளேன்' என்றாள் அன்னை பாத்திமா நாயகி.

### வழிபாடு தொடர்கிறது

இதன் பின் மழை ஒய்ந்தது சூரியன் தென்பட்டது சூரியனிலும் அன்னையின் அற்புதங்கள் தென்பட்டன. அன்றிலிருந்து அவ்விடத்திலே அன்னையின் திருக்காட்சி திருவுருவ சொரூபத்தை வைத்து வழிபடுகிறார்கள். அந்தப் பூமிக்கு அன்னையின் திருக்காட்சிப் பூமி என்று பெயரும் இட்டு அந்த ஷேன் மரத்தையும் புனிதமாக பாதுகாத்து வருகிறார்கள்.

'அம்மா என்றுஅழைத்தால் குழந்தாய் என்று வருவாய்; அன்பாய் தூக்கி நெஞ்சில் வைத்து என்னை காத்துக் கொள்வாய்'

## வெள்ளி விழா நிகழ்வுகள்

[தென்மராட்சி]

திருநெல்வேலியிலுள்ள இந்து அக்கடமியின் வெள்ளி விழா நிகழ்வுகள் இன்று நடைபெறவுள்ளன.

அக்கடமியின் நிர்வாகி எம். சிறீதரன் தலைமையில் நடைபெறவுள்ள வெள்ளி விழாவில் பிரதம விருந்தினராக யாழ். இந்துக் கல்லூரியின் முன்னாள் அதிபர் அ. பஞ்சலிங்கமும் சிறப்பு விருந்தினராக டாக்டர் இ. யோகேஸ்வரனும் பங்கு கொள்ளவுள்ளனர்.

அன்றைய தினம் நிறைவான வாழ்விற்கு மிகவும் முக்கியமானது- போதுமான பணமா? புரிந்து கொள்ளும் மனமா? எனும் தலைப்பில் பட்டி மன்றம் ஒன்றும் நடைபெறவுள்ளது.

அத்துடன் வெள்ளி விழா மலரும் வெளியிடப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது [உ-77]

## சிறுவர் அபிவிருத்தி குழுக்கூட்டம்

(ஊர்காவற்றுறை)

ஊர்காவற்றுறைப்பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட பருத்தியடைப்பு ஜே/50 கிராமசேவகர் பிரிவில் கிராமிய சிறுவர் அபிவிருத்திக் குழுக்கூட்டம் இன்று மு.ப 9.30 மணிக்கு கதிரேசன் சனசமூக நிலைய மண்டபத்தில் கிராம சேவையாளர் எம். ஜெபதரன் தலைமையில் இடம்பெறவுள்ளது.

இக்கூட்டத்தில் மாணவ, மாணவிகளை கலந்து கொள்ளுமாறு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. (உ-75)

## மின்இணைப்புக்கு 4 இலட்சம் ரூபா

(யாழ்ப்பாணம்)

ஊர்காவற்றுறைப் பகுதிக்கு மின்சாரம் வழங்கும் முகமாக வடக்கின் புனர்வாழ்வு புனரமைப்பு அமைச்சினால் ஒதுக்கப்பட்ட 4 இலட்சம் ரூபா பணம் ஊர்காவற்றுறைப் பிரதேச சபைக்கூடாகமின்சார சபைக்கு வழங்கப்படவுள்ளது. (உ-6)

## நாடக மாலை

(யாழ்ப்பாணம்)

மல்லாகம் கலைக்கல்லூரி பிரதி மாதந்தோறும் வழங்கி வரும் இலவச 'நாடக மாலை' நிகழ் இன்று பி.ப 3.30 மணிக்கு அளவெட்டி பாரதி சனசமூக நிலைய விளையாட்டரங்கில் க. சிவரூபன் தலைமையில் இடம்பெறவுள்ளது.

ஒட்டுண்ணி, ஊனம் ஆகிய இரு நாடக ஆற்றுகைகள் இடம்பெறும். (உ)

கற்க கசடறக் கற்றவை
கற்றபின் நிற்கஅதற்கு தக
- குறள்

# வலம்புரி

## பாவத்தின் சுமைகள்

யாழ்.மாவட்டத்தில் தொண்டர் ஆசிரியர்களாகக் கடமையாற்றியவர்களுக்கு நிரந்தர நியமனம்வழங்கும் பொருட்டு சில தினங்களுக்கு முன் நேர்முகப் பரீட்சை நடைபெற்றது.

இந் நேர்முகப் பரீட்சையை நேர்மையுடன் நடத்துவதில் மேலதிக மாகாணக் கல்விப்பணிப்பாளர் கலாநிதி தணிகாசலம்பிள்ளை அவர்கள் பெரும் பிரயத்தனம் செய்துள்ளார். எனினும் சில பாடசாலைகளின் அதிபர்கள்தமக்குத்தெரிந்தவர்களை ஏதோ ஒரு வகையில் தொண்டராசிரியராகப் பாவனை செய்து நேர்முகப் பரீட்சைக்கு அனுப்பி வைத்துள்ளனர்.

யாழ்ப்பாணத்து மண்ணில் எத்தனையோ கஷ்ரங்களின் மத்தியில், குறைந்த கட்டணத்தில் சேவை செய்த தொண்டராசிரியர்களுக்கு நியமனம் கிடைக்காமல் இருக்க பாடசாலைப் பக்கம் போகாத பலர் தமது பல்வகைப்பட்ட செல்வாக்குகளைப் பயன்படுத்தி ஆசிரியர் நியமனத்தைக் கைப்பற்றி விட்டனர். இதனால் உண்மையாக, தியாகத்துடன் பலவருடங்கள் பணியாற்றிய தொண்டராசிரியர்கள் நிரந்தர நியமனமின்றி கண்ணீர் வடித்த சோகம் முன்பு நடந்தேறிய கதை. அத்தகைய ஓர் நிலை மீண்டும் ஏற்படுமாயின் அதனை விடப் பெருமோசடி எதுவுமேஇருக்கமுடியாது.

இம் மோசடிகளில் அதிபர்கள் சிலர் தான் ஈடுபட்டார்களென்றால் இம்முறை நடந்த தொண்டர் ஆசிரியர்களுக்கான நேர்முகப் பரீட்சையில் சில தொழிற் சங்க முக்கியஸ்தர்களும் தமக்குத் தெரிந்த சிலரை ஒரு மாதிரியாக தொண்டராசிரியராக மாற்றிவிட்டுள்ளனர்.

ஊழல்களும், மோசடிகளும் நடக்கும் போதெல்லாம் குரல் கொடுக்க வேண்டிய தொழிற் சங்கங்களேஇவ்வாறுஊழலில் ஈடுபட்டால் எப்படி நீதி, நியாயம்கிடைக்கமுடியும்.

தத்தம் செல்வாக்குகளைத் தூக்கித் தலையில் வைத்தால் நாட்டில் பாவத்தின் சுமை அதிகரித்துஎங்கும் அழிவுகளே மிஞ்சும் ஏழைகள் அழுத கண்ணீர் கூரிய வாளை ஒக்கும் என்ற வள்ளுவனின் முடிவை கல்விச் சமூகத்தினராவது கடைப் பிடிக்க வேண்டுமென்பதே அனைவரின் விருப்பமாகும்.

---

பரமபிதா காட்டிய பாதை

# அன்னை பாத்திமாவின் அருங் காட்சி கண்டு

# போர்த்துக்கலில் வழிபாடு தொடங்கினர்.



நிரோயிகன்
மாகியம்பதி

போர்த்துக்கல் தேசத்தின் ஒரு முத்துபாத்திமா நகரம். இந்தநகருக்குஅருகில் ஒருசிறு கிராமம்,மலைகளின் அடிவாரத்தில் சிறிய சிறிய குடிசைகளிலே மக்கள் சந்தோஷமாக தமது வாழ்க்கைச் சக்கரத்தை சுழற்றிக் கொண்டிருந்தார்கள்.

சிறுவர்கள் தமது சிறு பராயத்திலேயே மந்தைகளை மேய்க்கும் பணியில் பொழுதைப் போக்கினார்கள் இச்சிறார்களிலே மூவர் தான் லூசியா, யசிந்தா, பிரான்சிஸ் கள்ளங்கபடம் அற்ற சிறுவர்கள், ஏழைக்குழந்தைகள வழமை போல் தமது மந்தைகளை மலையடிவாரத்தை விட்டு முட்புதர்ப்பக்கம் கூட்டிச் சென்றனர்.

### திருந்தாதி ஒலித்தது

1917ம ஆண்டு வைகாசி 13 ம நாள் இன்று போல் அதுவும் ஒரு ஞாயிற்றுக் கிழமைநண்பகல்வேளைகிராமப்பகுதியில் உள்ளதேவாலய மணி திருந்தாதிஒலியை எழுப்பியது; சிறுவர்களின் காதுகளில் திருந்தாதி இனிமையாக ஒலித்தது. முழந்தாழ்ப் படியிட்டு, திருந்தாதி செபத்தை கனிவோடு, உச்சரிக்க ஆரம்பித்தனர். அது முடிவடையும் தருவாயில் செபமாலை ஒதிச்செபித்தார்கள். உச்சியிலே சூரியன் சாய்ந்த வேளையிலும பிரகாசமுடைய 'பளீச்' என்ற திடீர் மின்னல் தோன்றியது. சூரியனைவிட கண்ணைச்சுட்டமின்னலைக்கண்டுபிள்ளைகள் திடுக்கிட்டு நோக்கினார்கள் மாசு மறுவற்ற தெளிந்த நீலவானம் ஒளிப்பிளம்புகள் நிறைந்து காணப்பட்டன. பயந்து, திடுக்கிட்ட சிறுவர்கள் மந்தைகளைத் திருப்பிக் கொண்டு வீடுசெல்லத் தொடங்கினர்;

### மின்னல் மத்தியில் நாயகி

விரைவில் வீடுசெல்லவேண்டும் என்ற ஏக்கத்தில் வேகமாக பற்றைகளையும், பள்ளங்களையும் தாண்டிவிரைந்தனர். மீண்டும் திடீரென பிரகாசமான மின்னல். அவர்கள் முன்னால் 2.3 அடிகளுக்கப்பால் ஒரு ''ஷேன்'' என்னும் மரத்தைச் சூழ்ந்து கொண்டது. அந்தப் பிரகாசத்தின் மத்தியில் ஒருநாயகி, விரிக்க வார்த்தை இல்லை என்ற விதத்தில் பேரழகு கொண்ட ஒருநாயகி தோன்

(6ம் பக்கம் பார்க்க)

---

# எந்த மதத்தையும் அரவணைக்கும் இந்துமதம்

# தோற்றுவிக்கப்படாது தானே முகிழ்த்த மதம்

திருமறைக்கலாமன்றதமிழ் விழா - 2001 11.05.2001 வெள்ளிக்கிழமை கலைத்தூது மணி மண்டபத்தில சைவசித்தாந்தம் கருத்தரங்கிற்கு தலைமை வகித்து, யாழ்ப்பாணம் மாவட்ட நீதிபதி கௌரவ இ.த.விக்னராசா ஆற்றிய தலைமையுரை (ஆ-ர்)

இ.த. விக்னராசா
(யாழ் மாவட்ட நீதிபதி)

இந்து மதத்தின் தொன்மை பற்றி நாமறிந்த முதலாவது காலப் பகுதியாகவிளங்குவது சிந்து வெளி' காலமாகும். சிந்து வெளிக் காலத்தை அடுத்து முக்கியத்துவம் பெறுவது 'வேதகாலம்' ஆகும். வேத காலம் என்பது சிந்து வெளிக் காலத்தையடுத்து ஏறத்தாழ கி.மு 1500 ஆம் ஆண்டளவில் நிலவியது என்பது ஆய்வாளர் பலரும் பொதுவாக ஏற்றுக்கொண்ட கருத்தாகும். சிந்து வெளி நாகரிகத்துக்குரியவர்கள் திராவிடர்கள்என்பதும் வேத கால நாகரிகத்துக்கு உரியவர்கள் ஆரியர்கள் என்பதும் குறிப்பிடத்தக்கது.

''சைவ சித்தாந்தம் ஒரு பரந்த ஆழமான தத்துவப் பேராழி அது தமிழரின் பெரும் சொத்து.

''மாசில்வீணையும் மாலை மதியமும்
வீசு தென்றலும் வீங்கிள வேனிலும்
மூசு வண்டறை பொய்கையும் போன்றதே;
ஈசன் எந்தை இணையடி நீழலே''

என்ற பாடலின் பக்திச் சுவையை வேறெந்த மொழியிலும் மொழி பெயர்க்க முடியாது. இதுவே தமிழன் கண்ட மனித நலவியற் கோட்பாட்டின் ஆதாரமும் பின்னணியும் என வண. பிதா தனிநாயகம் அடிகள் குறிப்பிட்டுள்ளார்;

### தானே முகிழ்ந்த மதம்

சைவ சித்தாந்தம் உட்பட தத்துவக் கோட்பாடுகளும் இவற்றைத் தெளிவுபடுத்தும் சமயக் கோட்பாடுகளும் ஒன்று சேர்ந்ததே இந்து மதமாகும்.

இது ஒருவரால் தோற்றுவிக்கப்படாமல் இயற்கையாகத் தானே முகிழ்த்த ஒரு மதமாகும். தானே தோன்றிய இந்து மதமாயினும் பிறரால் தோற்றுவிக்கப்பட்ட ஏனைய மதங்களாயினும் தாம்தோன்றிய இயற்கைக்கு ஏற்ற இயல்பினையே கொண்டிருப்பதைக் காணலாம். இந்த இயல்பு மதத்தின் தத்துவக் கோட்பாட்டினை விட மதத்தின் சமயக் கோட்பாட்டில் வெளிப்படையாகத் தோன்றுவதைக் காணலாம். மதமானது சாதாரண மக்களிடையே சமயக்கோட்பாடாக புறச் சடங்குகளாக விரிந்திருப்பதே இதற்குக் காரணமாகும்.

வலுவான சிறப்பான சமுதாயக் கட்டுக்கோப்புக்கு மதங்கள் பெரும்பணி ஆற்றி வந்துள்ளன. இதற்கு அரசியல் பொருளாதாரக் கோட்பாடுகளோடு கூடிய அமைப்புகள் ஒரு சவாலாக அமைந்த போதிலும் இவற்றால் முன்னையதனை மாற்ற முடியவில்லை.

மதக் கட்டுக்கோப்புக்குப் பௌத்த, கத்தோலிக்க, இஸ்லாமிய மதங்களை உதாரணமாகக் கொள்ளலாம். இந்த மதக் கட்டுக்கோப்புக்குச் சவாலாக அமைந்ததே காள்மாக்சின் சித்தாந்தம் ஆகும்.

### நெகிழ்ச்சித் தன்மை

பழமையும் முதுமையுமுடைய இந்து மதம்பௌத்தம் முதலான மதங்களை போன்ற வலுவான சிறப்பான சமுதாயககட்டுக்கோப்பினை உடையதாயினும்கால தேசவர்த்தமானங்களுக்கேற்ப நெகிழ்ந்து காடுககும் தன்மையை காலந்துக்குக் காலம் தோன்றிய ஞானிகள் இந்து மதத்தில ஏற்படுத்தி இந்து மதகதைத தெளிந்த நீர் பாயும் ஜீவநதியாக்கியுள்ளனர் இதனால ''கம்பனும் காள்மாக்சும, காந்தியும்காள மாக்சும்'' என்று சமரசம் காணும் மனப பக்குவத்தை இந்துக்கள் பெற்றுள்ளனர்.

இந்து மதம் காலத்தில முற்பட்டும் சிறந்த கோட்பாடுகளையும் உடைய காரணத்தால் அதற்குப் பின் தோற்றுவிக்கப்பட்ட மதங்களில இந்து மதம் உடன்பாடாகவும் எதிர்மறையாகவும் பல தாக்கங்களை ஏற்படுத்தியுள்ளது;

'உற்ற நோய் தோன்றல் உயிர்க்குறுகண் செய்யாமை அற்றே தயத்துக்குரு'

என்னும் கோட்பாட்டினையுடைய இந்து மதத்தினர், அக் கருணைக் கோட்பாட்டினைக்கைவிட்டு வேத வேள்விகளில் புரிந்த உயிர்க் கொலைகளைக்கண்டு தாளாத சமண, பௌத்த மதங்கள் ஜீவ கருணைக் கோட்பாட்டைத் தம் மூச்சாகக் கொண்டனர்.

''ஏதிலார் குற்றம் போல் தம் குற்றம்'' காண வேண்டிய இந்து மதத்தினர் அக் கோட்பாட்டை நெகிழ்ந்த வேளையில் பாவமன்னிப்பு என்னும் பெருந்தன்மையினைக் கிறிஸ்தவம் தன் கோட்பாடாகக் கொண்டது.

விக்கிரக வணக்கத்தின் தூய்மை கெட்டுப் பொய்யுகளவும் இந்து மதத்தினரிடம் புகுந்த போது விக்கிரக வணக்கமே பாவமானது என்னும் கோட்பாட்டைக் குரலாக இஸ்லாம்எழுப்பியது.

### அந்நியர் ஆதிக்கம்

ஏறக்குறைய கி.பி1500ஆம் ஆண்டு தொடக்கம் 150 ஆண்டுகள் வரை இலங்கை போத்துக்கேயரின ஆதிககத்தின் கீழும், அதன் பின் 150 ஆண்டுகள் வரை ஒல்லாந்தர் ஆட்சிக்குட்பட்டுமிருந்தது. இந்த 300 ஆண்டுகளும் இந்து சமயத்தைப பொறுதத வரை இருள் சூழ்ந்த காலமாகவே இருந்தது. இரு வகை ஆட்சியாளர்களும கிறிஸ்தவத்தையே நிலைநாட்ட வேண்டுமென அதற்காக வேண்டிய யாவற்றையும் செய்தனர். சைவ சமய திருத்தலங்கள பல தரைமட்டமாக்கப்பட்டன;

கி.பி. 1800 ஆம் ஆண்டு வரையில் ஆங்கிலேயர் ஆட்சி ஆரம்பித்தது. இவர்களின் ஆட்சியில் கட்டுப்பாடுகள் இருந்த போதிலும் முன்னைய கடுமையான வன்முறைகள் சிறிது தளர்த்தப்பட்டன இதுவே சைவ சமய மறுமலர்ச்சிக்குக் கால்கோளாக அமைந்தது என்று கூறலாம்.

இருளில் தத்தளித்த சைவ உலகிற்கு ஒளி விளக்கு ஏற்றி வைத்தவர் 1822 ஆம் ஆண்டு அவதரித்த நாவலர் பெருமான் என்பதில் சந்தேகமில்லை. இவர் தமது வாழ்நாள் முழுவதும் தமிழுக்கும் சைவத்திற்கும் அர்ப்பணித்தார், காலத்தின் தேவைக்கேற்ப தமிழ் வசன நடையை நடைமுறைப்படுத்தினார்.

1850 ஆம் ஆண்டில், பீற்றர் பேர்சிவல அடிகளின் வேண்டுகோளுக்கிணங்க விவிலியம் எனப்படும் புனித பைபிள் நூலை ஆங்கிலத்திலிருந்துதமிழில் மொழிபெயர்த்தவர் நாவலர். பல மொழிபெயர்ப்புக்களில் நாவலரின மொழிபெயர்ப்பே சிறந்தது என சென்னையில் கூடிய கற்றோர் அவை ஏற்றுக் கொண்டது கிறிஸ்தவ சபையின் அங்கீகாரத்தையும் பெற்றது. ''நாவலர் இப்பணியினால், தமிழ் வசன நடை வளர்ச்சிக்கு மட்டுமல்ல. கிறிஸ்தவ வேத வளர்ச்சிக்கும் அருந்தொண்டு புரிந்துள்ளார்'' என இலங்கையின் முன்னைநாள கிறிஸ்தவ அத்தியட்சர் ஒருவர் குறிப்பிட்டது கவனிககத்தக்கது.

சைவ மறுமலர்ச்சியில் இரண்டாவதாக திகழ்பவர் 1924 ஆம் ஆண்டு சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரிமுதல்வராக பதவிபெற்ற சைவப் பெரியார் க சிவபாதசுந்தரனார் என்பது குறிப்பிடத்தக்கது.

நாவலர் போன்ற மறுமலர்ச்சியாளர்கள இந்து சமய உணர்வை செழிக்கச் செய்யப் போராடினார்கள். கிறிஸ்தவ சமயத்தின் மத மாற்றத்திற்கான எதிர்ப்பை உருவாக்குவதில் தற்காப்பு உத்தியைக் கையாண்டனர். கிறிஸ்தவம் தகுதியற்றது என நிறுவப் போராடினர்.

(தொடரும்)

அற்புதமான
வடிவமைப்புக்களைக்
கொண்ட
அழகியதங்க நகைகளுக்கு
நங்கையர் நாடும் இடம்
நியூ
ராதிகாஸ்
நகை மாளிகை
189. கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்
(இ/ 1981)

# அமைச்சர் கதிர்காமரின் கடிதம்

# ஊடகதுறைக்கு எப்படிக்கிடைத்தது

## விசாரணைகள் தீவிரம்

வெளியுறவு அமைச்சர் லக்ஸ்மன் கதிர்காமர் நோர்வே வெளியுறவு அமைச்சருக்கு எழுதியிருந்த அந்தரங்கமான கடிதம் மர்மமான முறையில், பத்திரிகைகளுக்கு கிடைத்தது பற்றி கண்டறிவதற்கான முயற்சிகள் முடுக்கி விடப்பட்டுள்ளன.

மேற்படி கடிதம் வியாழனன்று வெளியுறவு அமைச்சரின் அங்கீகாரமின்றி அமைச்சு அலுவலகத்திலிருந்து வெளியேறியுள்ளது.

அக்கடிதம் அமைச்சின் அதிகாரபூர்வமானகடிதத்தலைப்பில் எழுதப்பட்டிருக்கவுமில்லை. அமைச்சரின் கையொப்பமிடப் பட்டிருக்கவுமில்லை, புதன்கிழமை இரவே அது தயாரிக்கப்பட்டுமிருந்தது. இந்நிலையில் இக்கடிதத்தை தயாரித்தவர்களின் வேலையாயிருக்கலாம் என்று இப்போது சந்தேகிக்கப்படுகிறது. அமைச்சின் அலுவலகத்திலிருந்தேகடிதம் ஊடகத்துறையினருக்கு சென்றிருக்கிறது என்றும் அமைச்சின் உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்;

வெளியுறவு அமைச்சரின் மேற்படி கடிதம் வெளியாகியதையடுத்துலண்டனிலுள்ள புலிகளின் ஆலோசகர் மறுப்புத் தெரிவித்து தனதுகவலையையும் வெளியிட்டிருந்ததும் இதனைத்தொடர்ந்து வன்னியிலுள்ள புலிகளின் தலைமையகமும் அரசின் கூற்றை நிராகரித்து உடன்பாடெதுவும் எட்டப்படவில்லைஎன்று கூறியதும் தெரிந்ததே;

# வன்னியில் வெற்றிவிழா

தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வே. பிரபாகரனின் வழிநடாத்தலால் முறியடிக்கப்பட்ட அக்கினிச் சுவாலை 1 படைநடவடிக்கை முறியடிப்பின் வெற்றி விழா இராணுவக் கட்டுப்பாடற்ற வன்னிப பிரதேசமெங்கும் சிறப்பாகக் கொண்டாடப் பட்டு வருகிறது.

விஸ்வமடு அக்கராயன் ஆகிய இடங்களில் வெகுஜன அமைப்புகளினால் இந்த வெற்றிவிழா கொண்டாடப் பட்டு வருகிறது;

இவ்வெற்றி விழாவின் போது இந்த முறியடிப்புச் சமரில் ஈடுபட்ட எல்லைப் படை வீரர்கள், மற்றும் படை அணியின் வீரர்கள் பாராட்டிக் கௌரவிக்கப் பட்டு வருகின்றனர். (ம)

## ஊரடங்கு நீக்கம்

[யாழ்ப்பாணம்]

513வது படைப்பிரிவுக்குட் பட்ட இளவாலைப் பகுதியில் புனித ஹென்றியரசர் கல்லூரியின் கலாசார நிகழ்வை முன்னிட்டு இன்று இரவு 9 மணியிலிருந்து 11 மணிவரை ஊரடங்கு தளர்த்தப்பட்டிருக்குமென யாழ் பாதுகாப்புத் தலைமைச் செயலகம் அறிவித்துள்ளது. [5

## சிப்பாய் பலி

சரசாலைப்பகுதியில்நேற்று அதிகாலை இடம் பெற்ற இராணுவப்பயிறசியின்போது மயங்கி விழுந்த சிப்பாய் ஒருவர் மரணமாகியுள்ளார்;

ஏ.டி.சி குமார ஜெயவீர என்ற சிப்பாயே இவ்வாறு மரணமானவராவார்.

இவரது பிரேதபரிசோதனையை கொழும்பு பொது வைத்தியசாலையில் மேற் கொள்ளுமாறு சாவகச்சேரி நீதவான் உத்தர விட்டுள்ளார்; (ந)

அரசும் : :
தெரியப்படுத்த வேண்டிய தேவை ஏன் ஏற்பட்டுள்ளது.
பதில்;-

இலங்கையின் ஒரேஒரு அயல் நாடு இந்தியா என்பதுடன், இனப்பிரச்சினை விடயத்தில் இந்தியாவின் முக்கியத்துவத்தை அரசும் புலிகளும் ஏற்றுள்ளனர்.

அதேவேளை இந்தியாவின் ஆலோசனையும் அவசியமாக வுளளது என்றும் எரிக்சோல் பதிலளித்தார்.

கேள்வி

விடுதலைப் புலிகள்தம்மீது விதிக்கப்பட்டுள்ள தடைநீக்கப்படவேண்டும் என்று முன் வைத்துள்ள கோரிக்கை தொடர்பாக நோர்வேயின்நிலைப்பாடு என்ன?

பதில்

இவ் விடயத்தில் நோர்வே எத்தவொரு தரப்பினருக்கும் அழுத்தம்கொடுக்கமாட்டாது

அரசோ அல்லது விடுதலைப் புலிகளோகருத்துக்கேட்டால் சம்பந்தப் பட்டவர்க்கு, ஆலோசனை வழங்கப்படும் என்றார்.

# புரிந்துணர்வு ஒப்பந்தப்பிரதி பாலசிங்கத்திற்கு அனுப்பி வைப்பு

(கொழும்பு)

இலங்கை அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையே சமாதானப் பேச்சுவார்த்தையை ஆரம்பிப்பதற்கு உதவியாக நோர்வே அரசினால் தயாரிக்கப்பட்டுள்ள புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் பிரதியை நோர்வேயின் சிறப்பு பிரதிநிதி எரிக்சோல் ஹெய்ம் விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கத்தின் கவனத்துக்கு சமர்ப்பித்துள்ளார்.

புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் நிழல்பிரதி ஜனாதிபதி சந்திரிகாவிடமும் நோர்வேயின் சிறப்புப் பிரதிநிதியிடமும் கையளிக்கப்பட்டு அதில் ஜனாதிபதியின் ஒப்பம்பெறப் படும்;

இதற்கான நோர்வேயின் சிறப்புப்பிரதிநிதி எரிக்சோல் ஹெய்ம் இன்னமும் இரண்டொருதினங்களில்கொழும்பு வரவுள்ளார்;

கொழும்பு வரும் அவர் இராணுவக்கட்டுப் பாடற்ற வன்னிப்பகுதிக்கு சென்று விடுதலைப்புலிகளின் தலைவர் வே. பிரபாகரனைச் சந்திக்கவுள்ளார். (ம

அரசு...
நோக்குடன் ஐக்கிய தேசியக் கட்சியினால் கொண்டுவரப் படவுள்ள நம்பிக்கை இல்லாத் தீர்மானத்தை ஆதரிப்பதா? இல்லையா? என்ற முடிவு நம்பிக்கை இல்லாத் தீர்மானம் கொண்டு வருவதை பொறுத்தே முடிவெடுக்கப்படுமென்றும் அக்கூட்டத்தில் தீர்மானிக்கப் பட்டுள்ளதாக கூட்டணி விடுத்த அறிக்கை ஒன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது;

நேற்று நடைபெற்ற நிறைவேற்றுக்குழுக் கூட்டத்தினை அடுத்து இரா; சம்பந்தன் வெளியிட்டுள்ள அவ்வறிக்கையில் மேலும் தெரிவிக்கப் பட்டுள்ளதாவது.

இலங்கை அரசினதும் விடுதலைப் புலிகளினதும் அழைப்பின்பேரில் இருசாராரும் ஏற்றுக்கொள்ளக்கூடிய சமாதானத் தீர்வு முயற்சியில் நோர்வே அரசு கடுமையாக ஈடுபட்டுள்ளது;

இலங்கையின் இனப்பிரச்சினைத் தீர்வில் தொடர்ச்சியாக நடைபெற்றுவரும் இராணுவ நடவடிக்கை நிலையான தீர்வைத்தரமாட்டாது;

சகல இராணுவ நடவடிக்கைகளையும்விடுத்து இருதரப்பினரும் சமாதானப் பேச்சில் பங்கேற்க முன்வரவேண்டும்

நீண்டகாலமாக துன்பதுயரங்களை அனுபவித்து வரும் வடக்கு கிழக்கு தமிழ் மக்களுக்கு இனப் பிரச்சினையில் நிலையான தீர்வுஎன்பதுவருவதைத்தடுக்காது பேச்சுவார்த்தையை ஆரம்பிக்கத் தக்க நடவடிக்கை எடுக்குமாறுஅரசையும் எதிர்க் கட்சியான ஐக்கியதேசியக் கட்சியையும் கூட்டணி கேட்டுக்கொள்கிறது;

1980ம்ஆண்டிற்குப்பின்னர் தற்பொழுது முதற் தடவையாக சமாதானப் பேச்சுக்கள் உருவெடுத்துள்ளன. கடந்த 25ம் திகதி ஆரம்பிக்கப்பட்ட அக்கினிச் சுவாலை-1 படை நடவடிக்கைசுமார் 600பேரைப்பலி கொண்டதுடன்பல நூற்றுக் கணக்கானோரைப் காயங்களுக் குள்ளாக்கியது; இத்தகைய இராணுவ நடவடிக்கைகள் அமைதிக்குப் பங்கம் விளைவித்து அனாவசிய உயிரிழப்புக்களை ஏற்படுத்துகிறது;

தமிழ்மக்கள் சமாதானத்தையே விரும்பு கின்றார்கள் அந்தசமாதானத்திற்கு அனைவரும்பாடுபடவேண்டும். என்றும் அந்தஅறிக்கையில் குறிப் பிடப்பட்டுள்ளது; [ம]

## இந்தியமீனவர் 22 பேர் கைது

நெடுந்தீவு கடற் பிரதேசத்திற்குள் அத்துமீறி நுழைந்த இந்திய மீனவர் 22 பேர் நேற்றுக்காலை கடற் படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்;

புதிய, பழைய வீடியோ
CDகளை வாடகைக்குப்
பெற்றுக் கொள்ள
மிலேனியம்
ஓடியோ
வீடியோ
சென்ரர்
238, கஸ்தூரியார் வீதி
யாழ்ப்பாணம்
(கி-1982)

ரவிகருணா : :
பாற்ற வேண்டும் என்றும் எழுதப்பட்டுள்ளது;

இதுபற்றி ரவிகருணாரத்ன கூறுகையில் இச்சுவரொட்டிகள் லேக்கவுஸ் நிறுவனத்தால் அச்சிடப்பட்டு பொலிசாரினாலும்,அமைச்சர்களின் பாதுகாப்பு உத்தியோகத்தர்களினால்கடந்தபுதன்கிழமை தொடக்கம் ஒட்டப்பட்டது

ஐ,தே,கட்சியின்
வில் திருந்திவிடும் என்று நம்புகிறோம்;

தமிழர்களைப் பொறுத்த மட்டில்இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாணப்படுவதுதான் முக்கியமாகும், சமாதானப் பேச்சுவார்த்தைகளுக்கான நம்பிக்கை ஒளி பிரகாசமானமாகவுள்ளது, இச்சந்தர்ப்பத்தில் தற்போதைய அரசு மீது நம்பிக்கை இல்லாத்தீர்மானம் கொண்டுவருவதுசாத்தியமில்லை.

இன்றைய சூழ் நிலையில் எம்மைப் பொறுத்த மட்டில் இனப்பிரச்சினைக்குரிய தீர்வை முக்கியமானதாகக் கருத வேண்டும். அரசாங்கத்தின் மீது ஐக்கிய தேசியக் கட்சி நம்பிக்கையில்லாத் தீர்மானத்தைக் கொண்டுவருவதற்கு ஆதரவளித்தால் வெண்ணை திரண்டு வரும் வேளையில் தாளியை உடைப்பதற்குச் சமமாகும்.

தமிழ் பேசும் மக்கள் சமாதானத்திற்காக மிக நீண்ட காலமாகப் போராடி வந்துள்ளனர்; தற்போது அவர்கள் ஏங்கித் தவித்த பேச்சு வார்த்தைக்கான ஒளி தென்படுகிறது. பேச்சுவார்த்தை விடயத்தில் விடுதலைப் புலிகள் இயக்கம் கைவிரிக்கவில்லை, அதைப்போலவே நோர்வேத் தூதுவரும்கைவிரிக்கவில்லை;

அரசாங்கமும் இனப்பிரச்சினைத் தீர்வுக்கு சமாதானப் பேச்சுவார்த்தையை நடத்தியே தீருவதென்று உறுதியாகச் செயற்பட்டுவருகிறது; இதனடிப்படையில் சமாதானப் பேச்சுகளுக்கு ஏற்பட்டுள்ள வாய்ப்பைக் குழப்ப முடியாது.

தமிழர் விடுதலைக் கூட்டணி தான் செய்யும் ஒவ்வொரு காரியங்களுக்கும் மக்களின் நியாயத்தையே அடிப்படையாகக்கொண்டு செயற் பட்டு வந்திருக்கிறது; இச் சந்தர்ப்பத்தில் இனப்பிரச்சினைத் தீர்வுக்கான வாய்ப்புக்கள் வரும்போது அதனை கூட்டணி குழப்பியது என்ற பழிச்சொல் ஏற்படக்கூடாது;

பேச்சு வார்த்தை மூலமாக இனப்பிரச்சினைக்கு நிரந்தர தீர்வு காணப்படவேண்டும்; போர் ஒழிந்து தமிழ் மக்களின் நியாயமான அபிலாசைகள் நிறைவேற்றப்படவேண்டும் என்றும் ஆனந்தசங்கரி தெரிவித்துள்ளார்; (ம)

## மரண அறிவித்தல்

### A.R.V. சோமசுந்தரம்

(பொன்னாவளை களபூமி)

காரைநகரைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட A. R. வேலுப்பிள்ளை சோமசுந்தரம் 12-05-2001 சனிக்கிழமை காலமானார்;

அன்னார் காலஞ் சென்ற A. R. வேலுப்பிள்ளை பொன்னம்மா அவர்களின் அன்பு மகனும் காலஞ் சென்ற K. K. விஸ்வலிங்கம் தெய்வானைப்பிள்ளையின் பாசமிகு மருமகனும் கமலாம்பிகையின் அன்புக் கணவரும் சத்தியபாமா (லண்டன்) சத்தியகுமார் (லண்டன்) சத்தியமாலா (முன்னாள் உதயன், வலம்புரி ஊழியர்) வளர்மதி அருட்செல்வன் (குருநாகல்) ஆகியோரின் பாசமிகு தந்தையும் சதானந்தலிங்கத்தின் (லண்டன்) பாசமிகு மாமனாரும் குலரத்தினம் (லிங்கன் ஸ்ரோர்ஸ் யாழ்ப்பாணம்: தலைவர் யாழ். வர்த்தக சங்கம்) கனகம்மாவின் சம்பந்தியும்.

காலஞ் சென்ற பாக்கியம், கனகம்மா, பரமசிவம் பிள்ளை, தவமணி, காலஞ் சென்ற சரஸ்வதி, ஆகியோரின் அன்புச் சகோதரனும் காலஞ் சென்ற ஆறுமுகம், குலரத்தினம் காலஞ் சென்ற ஆறுமுகதிலகர், சிவபாலாம்பிகை, சிவசுப்பிரமணியம், பரமானந்தம், பஞ்சலிங்கம், புவனேஸ்வரி, ராஜேஸ்வரி, திலகவதி, இந்திராணி ஆகியோரின் மைத்துனரும் காலஞ்சென்ற A. R. வினாசித்தம்பி ராசம்மாவின் பெறாமகனும் ஆவார்

அன்னாரின் இறுதிக் கிரியைகள் 13-05-2001 இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று தகனக் கிரியைக்காக தில்லை மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் சகலரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்
கமலாம்பிகை (மனைவி)

பொன்னாவளை,
களபூமி,
காரைநகர்.

[கி-1994]

நாகம்ஸ்
(சுன்னாகம்)
அர்ஜுன், ஜோதிகா,
மீனா, மணிவண்ணன்
நடித்த
ரிதம்
(சினிமாஸ்லிமிற்ரெட்)
வெளியீடு
11-00, 2-30 பு. நே:
சனி ஞாயிறு பி: ப 6 மணி
(ரீலிஸ்) (கி-1977)

சுகாதார முறைப்படி உணவிற்கும் வைத்தியர் களுக்கும்
விஷேசமாகத் தயாரிக்கப்பட்டது
சுத்தமான
வி.எஸ்.பி. நல்லெண்ணெய்
தயாரிப்பாளரும், ஏகவிநியோகஸ்தரும்
பரிமளா ஸ்டோர்ஸ்
26A, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம்.
(கி-1986)

இப்பத்திரிகை ''வலம்புரி'' அங்கோ இதாபனத்தாரால் இல; 15, வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம்எனும் விலாசத்தில் அமைந்துள்ள அவர்களது அச்சகத்தில் 2001 ஆண்டு மே மாதம் 12ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது;